




விலை ரூபா 40
பக்கங்கள் - 12

# ஒருவன்

ORUVAN - ඔරුවන්

ஆண்டு: 01 இதழ் : 60 குரோதி வருடம் மார்கழி மாதம்
16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1446 ஜமாதுல் ஆகிரா 30 (31.12.2024)







## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வவுனியாவில் நேற்று ஆர்ப்பாட்டம்







( கி.வசந்தன் )

காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதியை ஐக்கிய நாடுகள் சபைபெற்றுத் தர வேண்டும் எனக் கோரி ஆர்ப்பாட்டமொன்ற வவுனியாவில் நேற்று (30) முன்னெடுக்கப்பட்டது. வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் ஏற்பாட்டில் வவுனியா பழைய பேருந்து நிலையம் முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் (தொடர்ச்சி...) 02

## 03 மாதங்களில் நாட்டை ஸ்திரப்படுத்தியுள்ளோம்

### சர்வதேச சமூகமும் ஏற்றுள்ளது என்கிறார் அமைச்சர் நளிந்த

( பாலகணேஷ் டிலுக்ஷா )

பதவியேற்று மூன்று மாதங்களுக்குள் நாட்டை ஸ்திரப்படுத்துவதற்கு அரசாங்கத்தால் முடிந்துள்ளதாக சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

களுத்துறை மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவராக நேற்று திங்கட்கிழமை பதவியேற்றதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இங்கு மேலும் கருத்து தெரிவித்த அவர்,

இடைநிறுத்தப்பட்ட பல சர்வதேச மற்றும் வெளிநாட்டு முதலீட்டுத் திட்டங்கள் புதிய அரசாங்கத்தின்

மூலம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.பொருளாதாரம் மீண்டும் திவாலாகி விடும் என எதிர்க்கட்சிகள் கூறினாலும், ஜனாதிபதியால், நிதியமைச்சு (தொடர்ச்சி...) 02



## 20க்கும் மேற்பட்ட தமிழரசு கட்சி உறுப்பினர்களிடம் விளக்கம் கோரல்

கடந்த ஜனாதிபதி தேர்தலில் கட்சி முடிவை மீறி செயல்பட்டார்கள் என்ற காரணத்தின் பேரில், மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 20க்கும் மேற்பட்ட தமிழரசுக் கட்சி உறுப்பினர்களிடம் கட்சியின் பதில் பொதுச் செயலாளரினால் விளக்கம் கோரப்பட்டுள்ளதாக தெரி விக்கப்படுகிறது.

கட்சியின் முடிவை மீறியதாக குறிப்பிட்டு அதற்கு விளக் கம் கோரி பதில் பொதுச் (தொடர்ச்சி...) 02



## ஜிம்மி கார்ட்டர் காலமானார்!



அமெரிக்காவின் 39 ஆவது ஜனாதிபதியான ஜிம்மி கார்ட்டர் (Jimmy Carter), தனது 100 ஆவது வயதில் ஜோர்ஜியாவில் உள்ள அவரது வீட்டில் காலமானார். 1977 முதல் 1981 ஆம் ஆண்டு வரை அவர் அமெரிக்காவின் ஜனாதிபதியாக இருந்தார்.

தனது மனிதாபிமானப் பணிக்காக அமைதிக்கான நோபல் பரிசை வென்ற கார்ட்டர், இஸ்ரேலுக்கும் எகிப்துக்கும் இடையே சமாதானத்தை ஏற்படுத்திய பெருமைக்குரியவர் ஆவார். கார்ட்டர், (தொடர்ச்சி...) 02

## இராணுவம், கடற்படைக்கு புதிய தளபதிகள்



புதிய இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் லசந்த ரொட்ரிகோவும் புதிய கடற்படைத் தளபதியாக ரியர் அட்மிரல் காஞ்சன பானகொடவும் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவினால் நியமிக்கப்பட்டுள்ளனர். (தொடர்ச்சி...) 02

## பொது வேட்பாளர்: கட்சியிலிருந்து நீக்கப்பட்டதே மிச்சம்



( பு.கஜிந்தன் )

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப்பொது வேட்பாளரின் தேறிய இலாபம் கட்சியிலிருந்து அவரது நீக்கமும் தேர்தல் கணக்கறிக்கை வழக்கும் மாத்திரமே என பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியப் (தொடர்ச்சி...) 02

## கட்சிக்குள் மோதலென்பது கோமாளிகளின் கூத்து

(மட்டக்களப்பு நிருபர் )



தமிழரசுக்கட்சிக்குள் இருக்கும் ஒரு சில கோமாளிகள் கட்சிக்குள் பிரச்சினைகள் இருப்பதுபோன்ற தோற்றப்பாட்டினை ஏற்படுத்தமுனைவதாக தமிழரசுக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார். மட்டக்களப்பு, களுவாஞ்சிகுடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பெரியகல்லாறு மத்திய விளையாட்டுக்கழகம் வருடாந்தம் நடாத்தும் மாபெரும் இரத்ததான (தொடர்ச்சி...) 02

## மின்சாரம் தாக்கி மூவர் உயிரிழப்பு

### கற்பிட்டியில் சம்பவம்

(கற்பிட்டி எம்.எச்.எம்.சியாஜ்)

நுரைச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கற்பிட்டி, மாம்புரி பகுதியில் மின்சாரம் தாக்கி புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நான்கு பேரில் மூவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் 02

## மட்டக்களப்பு மாவட்ட எல்லைப் பிணக்குகளை உடனடியாக தீருங்கள்

(எம்.பஹாத் ஜுனைட்)

மட்டக்களப்பு மாவட்ட எல்லைப்பிணக்குகளை உடனடியாக தீர்க்குமாறுநாடாளுமன்ற உறுப்பினர் எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் கோரிக்கை விடுத்தார். மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டம் மாவட்டஅபிவிருத்தி குழுவின் தலைவரும் பிரதிஅமைச்சருமான அருண் ஹேமசந்திரா தலைமையில் மாவட்ட செயலகத்தில் நேற்று (30) நடைபெற்றது.



இதில் கலந்துகொண்டு கருத்துத்தெரி வித்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்எல். ஏ.எம் ஹிஸ்புல்லாஹ், மட்டக்களப்பு மாவ ட்டத்தில் எல்லைப் பிரச்சினையானதுநீண் டகாலமாக காணப்படுவதாகவும் (தொடர்ச்சி...) 02

## மாணவர் அனுமதிக்கு பணம் அறவிடுவது தண்டனைக் குற்றம்

### கல்வியமைச்சு அறிவிப்பு

( முகம்மட் முக்தார் )

அரசாங்க பாடசாலைகளில் 2025 ம் ஆண்டுக்கான முதலாம் தரத்திற்கும், ஆறாம் தரத்திற்கும் மாணவர்கள் அனுமதிக்கும் போது பாடசாலைகளில் கட்டணம் அறவிடுவது நன்கொடைகள், பரிசுப்பொருட்களை, கோருவது தண்டனைக்குரிய குற்றமும்,சட்டவிரோதமானதுமென கல்வி அமைச்சு சகல பாடசாலைகளின் அதிபர்களுக்கும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

பாடசாலைகளுக்கு முதலாம் தர மாணவர்களை அனுமதிக்கும் தேசிய நிகழ்வுகள் ஜனவரி 31 ம் திகதி (தொடர்ச்சி...) 02

## ஜனாதிபதி நிதியம் புதிய இடத்திற்கு மாற்றம்

கொழும்பு 10, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை, லேக்ஹவுஸ் கட்டிட த்தின் 3வது மாடியில் இயங்கி வந்த ஜனாதிபதி நிதியத்தின் அலுவலகம் 2025 ஜனவரி 01 ஆம் திகதி முதல் புதிய இடத்தில் நிறுவப்பட உள்ளது. இதன்படி, ஜனாதிபதி நிதியத்தின் புதிய அலுவ லக வளாகம் கொழும்பு 01, ஜனாதிபதி மாளிகைக்கு முன்பாக அமைந்துள்ள ஸ்டேண்டர்ட் சார்டர்ட் (தொடர்ச்சி...) 02



அரசியல் கைதிகளை விடுவிக்க வலியுறுத்தி நேற்று மன்னாரில் கையெழுத்துப் போராட்டம் இடம்பெற்றது. நீதிமன்றத் தினால் விடுதலை செய்யப்பட்ட பின்னர் மீண்டும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள போராளிகளையும் புதிய அரசாங்கம் விடுவிக்க வேண்டும் என்றும் இதில் கோரிக்கை முன்வைக்கப் பட்டிருந்தது. (மன்னார் நிருபர் -எஸ்.ஆர்.லெம்பேட்)

## 16 அடி முதலை உயிருடன் பிடிப்பு



(ஏ.எச்.ஏ. ஹுஸைன்,கே.சரவணன்)

மட்டக்களப்பு புளியந்தீவு வாவிக்கரை வீதியில் சுமார் 16 அடி நீளமான முதலையொன்று பொதுமக்களால் உயிருடன் பிடிக்கப்பட்டுள்ளது. சில தினங்களாக மட்டக்களப்பு வாவியில் சஞ்சரித்த இந்த முதலை ஞாயிற்றுக்கிழமை (தொடர்ச்சி...) 02

## தென் கொரிய விமான விபத்து: இறுதி 2 நிமிடத்தில் நடந்து என்ன?

( ஆர்.மனோசங்கர் )

தென் கொரியாவில் (29) ஞாயிற்றுக்கிழமை 179 பேர் உயிரிழந்த விமான விபத்து அந்நாட்டில் பதிவான மோசமான பேரனர்த்தமாகும். இந்நிலையில், விபத்து நடந்த இடத்தில் இருந்து இரண்டு கருப்பு பெட்டிகளை அதிகாரிகள் மீட்டுள்ளனர்.

இதன்படி, விமான நிலைய ஓடுபாதையில்விமானம்தரையிறங்கிவிபத்துக்குள்ளாவதற்கு முந்தைய இறுதி தருணங்கள் குறித்த முக்கியமான தகவல்கள் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. விபத்துக்கான காரணம் குறித்து அதிகாரிகள் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். தரையிறக்கும் கியர் செயலிழப்பு மற்றும்பறவை மோதியதில் விபத்து ஏற்பட்டதா என்பது குறித்து அதிகாரிகள் கவனம் செலுத்தியுள்ளனர்.

1. போயிங் 737-800 விமானத்திற்கு என்ன ஆனது?

ஜெஜு ஏர் நிறுவனத்தால் இயக்கப்படும் 737-800 விமானம் ஞாயிற்றுக்கிழமை (தொடர்ச்சி...) 02

## பொதுவேட்பாளர்...

பசுமை இயக்கத்தின் சமகால அரசியல் உரையரங்கு ஞாயிற்றுக்கிழமை (29) யாழ். ஆவரங்கால் கூட்டுறவு மண்டபத்தில் இடம்பெற்றது. இதற்குத் தலைமை வகித்து அவர் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழ்த்தேசிய அரசியல் கட்சிகள் சிலவும் தமிழ் மக்கள் பொதுச்சபையும் இணைந்து உருவாக்கிய தமிழ்த்தேசியப் பொதுக்கட்டமைப்பு பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்தியிருந்தது.

கோட்பாட்டு ரீதியாக இதனை ஏற்றுக்கொண்ட தமிழ்த்தேசியப் பசுமை இயக்கமும் இவரது வெற்றிக்காகக் கடுமையாக உழைத்தும் இருந்தது. அவர் இரண்டு இலட்சத்துக்கும் அதிகமான வாக்குகளைத் திரட்டியிருந்தார். இது தமிழ் மக்களைத் தேசமாகத் திரட்டுவதில் கிடைத்த வெற்றியாகவே நோக்கப்பட்டது. ஆனால், பாராளுமன்றத் தேர்தலில் தேசமாகத் திரட்டப்பட்ட மக்கள் புதிய வழிகாட்டுதல் இல்லாததால் பிரிந்து நின்று தங்கள் விருப்பத்துக்கு வாக்களித்தார்கள்.

இந்நிலையில் தமிழ்ப்பொதுவேட்பாளரின் தேறிய விளைவாக கட்சியில் இருந்து அவர் நீக்கப்பட்டதும் ஜனாதிபதித் தேர்தலில் அவர் செலவழித்த கணக்கு விபரங்கள் தொடர்பான வழக்கும் மாத்திரமே எஞ்சியுள்ளன என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

யுத்தத்துக்குப் பின்னர் தமிழ் அரசியலை நெறிப்படுத்த சிவில் அமைப்புகள் எனப்படும் குடிசார் அமைப்புகளின் வகிபாகம் இன்றியமையாததாக உணரப்பட்டது. இதன் விளைவாகவே தமிழ் மக்கள் பேரவை தோற்றம் பெற்று வெற்றிகரமாக எழுக தமிழ் பேரணிகளை நடாத்திக் காட்டியிருந்தது.

தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்காகக் குறைந்தபட்சத் தீர்வுத் திட்டம் ஒன்றையும் முன்வைத்திருந்தது. தமிழ் மக்கள் பேரவையின் மீது மக்கள் மிகுந்த எதிர்பார்ப்பையும் கொண்டிருந்தார்கள். ஆனால், தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவர்களில் ஒருவராக இருந்த சி.வி. விக்னேஸ்வரன் தனியான ஒரு கட்சியை ஆரம்பித்ததுடன் அது குறை ஆயுளுடன் முடிவுக்கு வந்தது.

குடிசார் அமைப்புகள் இணைந்து உருவாக்கிய தமிழ் மக்கள் பொதுச்சபை மீதும் மக்கள் நம்பிக்கை கொண்டிருந்தார்கள். இதனால்தான் பொதுவேட்பாளருக்கு தமிழ் மக்கள் திரளாக வாக்களித்திருந்தார்கள். ஆனால், அந்த நம்பிக்கையும் இப்போது பொய்த்துப்போய்விட்டது. உரிய வழிவரைபடம் அதனிடம் இல்லாத காரணத்தால் ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து குறுகிய கால இடைவெளியில் வந்த நாடாளுமன்றத் தேர்தலை அது எதிர்கொள்ளமுடியாமல் பின்வாங்கியது.

தமிழ்த்தேசிய உணர்வுடன் தன் பின்னால் திரண்ட மக்களுக்கு அது வழிகாட்டத் தவறியது. இதுவும் வடக்குக் கிழக்கில் ஜே.வி.பி இன் வெற்றிக்கு ஒரு காரணமாக அமைந்தது.

மக்கள் சிவில் சமூக அமைப்புகளை நம்பமுடியாத ஒரு சூழ்நிலையை சிவில் அமைப்புகளே இன்று உருவாக்கி விட்டன. அரசியலில் சிவில் அமைப்புகள் தங்களின் வகிபாகம் குறித்து மீள் பரிசீலனை செய்தாலொழிய அவற்றால் இன்னொரு கட்டத்துக்கு நகர முடியாது. சிவில் அமைப்புகள் சில கட்சிகளின் பினாமிகளாகவே உள்ளன.

சிவில் அமைப்புகளின் மூலம் கிடைக்கும் பிரபல்யத்தைப் பயன்படுத்தி சிலர் தேர்தலில் குதிப்பவர்களாகவும் இருக்கிறார்கள். கட்சி அரசியலை முன்னிறுத்தாத, தமிழ்த்தேசிய அரசியலை மட்டுமே குறிக்கோளாகக் கொண்ட ஒரு மக்கள் இயக்கமாக சிவில் சமூகங்கள் மாற்றம் பெற்றாலொழிய தமிழ்த்தேசிய அரசியலை வருங்காலங்களில் அவற்றால் நெறிப்படுத்த முடியாது என்றும் தெரிவித்தார்.

## தென்கொரியா..

சர்வதேச

விமான நிலையத்தில் விபத்துக்குள்ளானது, விமானத்தின் அடிபகுதி ஓடுபாதையில் சறுக்கிச் சென்று சுவரில் மோதி விபத்துக்குள்ளானது.

பறவைகள் மோதும் அபாயம் குறித்து கட்டுப்பாட்டு பிரிவினர் எச்சரித்த சில நிமிடங்களுக்குப் பிறகு விமானி "மேடே" அவசர அழைப்பை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

விமானத்தின் இயந்திரத்திற்குள் ஒரு பறவை நுழைந்து செயலிழப்பை ஏற்படுத்தியிருக்கலாம் என்று கொரிய அதிகாரிகள் கருதுகின்றனர்.

விபத்தின் காணொளி காட்சிகள் விமானத்தின் தரையிறங்கும் கியர் விரிவடையவில்லை என்பதைக் காட்டியது, இது பறவை மோதலுடன் தொடர்புடையதா என்ற கேள்விகளை எழுப்பியுள்ளது.

2. பறவை மோதுவது என்றால் என்ன?

பறவைகள் விமானப் போக்குவரத்துக்கு ஆபத்தானவை, ஏனெனில் அவை டர்பைனுக்குள் இழுக்கப்படலாம் அல்லது விமானத்தின் பிற பகுதிகளை சேதப்படுத்தலாம், இதனால் இயந்திரம் செயலிழந்து போகக்கூடும்.

2009ஆம் ஆண்டில் ஒரு ஏர்பஸ் A320 விமானத்தில் ஒரு பறவை மோதியதால் விமானத்தின் இரண்டு இயந்திரங்களும் சேதமடைந்தன. இதையடுத்து விமானம் நியூயோர்க்கில் உள்ள ஹட்சன் ஆற்றில் தரையிறங்கியது.இந்த விபத்து "ஹட்சனில் அதிசயம்" என்று அழைக்கப்படுகிறது, ஏனெனில் விமானத்தில் இருந்த அனைவரும் உயிர் சேதம் இன்றி காப்பாற்றப்பட்டனர்.

1990 மற்றும் 2019 க்கு இடையில் அமெரிக்காவில் சிவில் விமானங்கள் மீது சுமார் 227,000 பறவைகள், மான்கள் மற்றும் குள்ளநரிகள் உள்ளிட்ட வனவிலங்கு தாக்குதல்கள் நடந்துள்ளதாக ஃபெடரல் ஏவியேஷன் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

அந்தக் காலகட்டத்தில், உலகளவில் வனவிலங்கு தாக்குதல்களால் 292 மனித இறப்புகள் பதிவாகியுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவில் சிவில் விமானங்கள், இராணுவம் அல்லாத விமானங்கள் மீது பறவை மோதல்களில் சுமார் 61 வீதமானவை விமானங்கள் தரையிறங்கும் போது நிகழ்ந்ததாக ஃபெடரல் ஏவியேஷன் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

விமானங்கள் சிறிது நேரம் ஒரே ஒரு இயந்திரத்துடன் இயக்க முடியும், மேலும் விமானிகள் எரிபொருளை தீர்ப்பது போன்ற பிற பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்கலாம்.

2020 மற்றும் 2024 க்கு இடையில் பதிவான பறவை மோதல்களில் பாதியளவு 500 அடிக்கும் குறைவான உயரத்தில் நிகழ்ந்ததாக சர்வதேச விமானப் போக்குவரத்து சங்கத்தின் ஆப்பிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு பிராந்திய பாதுகாப்புத் தலைவரான ஜெஹாத் ஃபக்கீர் கடந்த மே மாதம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்தார்.

சமீபத்திய ஆண்டுகளில் பறவை மோதல்கள் அதிகரித்து வருவதாக எச்சரித்த அவர், அவை "குறிப்பிடத்தக்க செயல்பாட்டு ஆபத்தை ஏற்படுத்துகின்றன" என்றும் கூறியுள்ளார்.

3. விசாரணையாளர்கள் எதில் கவனம் செலுத்துகிறார்கள்?

தென் கொரிய அதிகாரிகள் நாட்டில் இயங்கும் 101 போயிங் 737-800 விமானங்களையும் ஆய்வு செய்யவுள்ளனர். இதனால் போயிங் மற்றும் இயந்திர தயாரிப்பாளர்களை இந்த நடவடிக்கையில் இணையும்படி அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

பறவை மோதலின் சாத்தியக்கூறு குறித்து கவனம் செலுத்தும் அதே வேளையில், விமான நிறுவனம் மற்றும் விமான நிலையத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகள், அத்துடன் விமானத்தின் மின் அமைப்பு விபத்துக்கு முன்பு மூடப்பட்டதற்கான சாத்தியக்கூறுகள் போன்ற பிற காரணிகளையும் அதிகாரிகள் ஆராய்வார்கள்.

## மாணவர்...

ஏககாலத்தில் நாடளாவிய ரீதியில் இடம்பெறவுள்ளதால் கல்வி அமைச்சு இவ்வெச்சரிக்கையை விடுத்துள்ளது.

பாடசாலைகளில் கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட வசதிகள் சேவை கட்டணம், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்துக்கான அங்கத்துவப் பணம் தவிர்ந்த வேறு எவ்வகையான கட்டணத்தையும் அறவிடுவதற்கான அங்கீகாரம் கல்வி அமைச்சினால் வழங்கப்படவில்லையெனவும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது .

இதேபோல் ஆறாம் தரத்திற்கு மாணவர்களை அனுமதிக்கும் போதும் எவ்வித கட்டணங்களையும் அறவிடக்கூடாது.

பாடசாலைகளுக்கு நிதி உதவியை பெறும் நோக்கில் பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள் மூலம் மாணவர் அனுமதியை மையமாகக் கொண்டு பெற்றாரிடம் நிதி அறவிட்டினையோ , பரிசுப் பொருள்களையோ, நன்கொடைகளையோ அதிபர்கள் கோரக்கூடாது எனவும் கல்வி அமைச்சு மேலும் அறிவித்துள்ளது.

மாணவர்களின் அனுமதிக்காக பணம் கோரிய சில அதிபர்கள் சேவையில் இருந்து நீக்கப்பட்டு அவர்களுக்கெதிராக சட்ட , நீதிமன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதையும் அமைச்சு நினைவுபடுத்தியுள்ளது.

மாணவர் அனுமதிக்காக நிதி அறவீடு அல்லது பொருள் நன்கொடை கோரும் அதிபர்கள்,பாடசாலை பழைய மாணவர், அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் தொடர்பாக கல்வி அமைச்சின் துரித இல.1911 மற்றும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் துரித இல.1954 ஆகிய இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு தகவல்களை வழங்க முடியும்.

## 20க்கும்...

செயலாளர் ப. சத்தியலிங்கம் 24.12.2024, திகதி குறிப்பிட்டு கடிதங்கள் அனுப்பியுள்ளார். இந்த கடிதத்தில் மாவட்ட குழுவில் முடிவு எடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மாவட்டக் குழு செயலாளர் ஞா.ஸ்ரீநேசனிடம் இதுதொடர்பில் கேட்டபோது, இப்படி எந்த தீர்மானமும் எடுக்கப்படவில்லை என கூறினார்.

வடக்கு,கிழக்கில் எட்டு மாவட்டங்களில் உள்ள பல தமிழரசுக்கட்சி உறுப்பினர்கள் ஜனாதிபதி தேர்தலில், தமிழ் பொதுவேட்பாளருக்கே நேரடியான பிரசாரங்களை முன்னெடுத்தும், மேடைகளில் ஏறி பிரசாரம் செய்தும் இருந்தனர். ஏனைய மாவட்ட உறுப்பினர்கள் எவருக்கும் இவ்வாறு சத்தியலிங்கம் கடிதம் அனுப்பாதது ஏன் என தமிழரசு கட்சி உறுப்பினர்கள் பலர் கேள்வி எழுப்புகின்றார்கள்.

வவுனியா மாவட்டத்திலுள்ள தமிழரசுக்கட்சி உறுப்பினர்கள் சங்கு சின்னத்தை ஆதரித்தது அவருக்கு தெரியாதா என்பது ஒருவிடயம்.அடுத்த விடயம் ஜனாதிபதி தேர்தல் இடம்பெற்றது 21.09.2024இல். அதன்பின்னர் பொதுத்தேர்தல் இடம்பெற்றது 14.11,2024 இல். இந்த விளக்கம் கேட்கப்பட்ட அனைவரும் பொதுத்தேர்தலில் தமிழரசுகட்சிக்கே ஆதரவு தெரிவித்தனர்.

இது எந்த வகையில் நியாயம்? ஒருவேளை பொதுத்தேர்தலுக்கு ஜனாதிபதி தேர்தல் நடந்த கையோடு இப்படியான விளக்க கடிதம் எழுதாமல் அவர் கோமாவிலா இருந்தார் என்றும் கட்சியின் உறுப்பினர்கள் சிலர் கேள்வி எழுப்புகின்றார்கள்.

மட்டக்களப்பில் உள்ள முதிர்ச்சியற்ற அரசியல்வாதிகளின் கருத்துக்கு மத்தியகுழுவில் உள்ள சிலர் தாளம் போட்டு நாடகம் ஆடுவது இதன்மூலம் உறுதியாய் தெரிவதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கூறுகிறார்.

இதன் எதிரொலி எதிர்வரும் உள்ளூராட்சி சபை தேர்தலில் தெரிய வருமென சிலர் சுட்டிக் காட்டுகின்றனர்.

## கட்சிக்குள்...

முகாம் (29) பெரியகல்லாறு இந்து கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.இதில் கலந்துகொண்டு உரையாற்றிய சாணக்கியன் எம்.பி தொடர்ந்து கருத்து தெரிவித்கையில் ,

தமிழரசுக் கட்சிக்குள் தொடர்ந்தும் குழப்பம் இல்லை. ஒரு சில கோமாளிகள் தாங்கள் விரும்பிய விடயத்தை ஊடகத்தில் கூறவிரும்பினால் எவரையாவது அழைத்து பேட்டி கொடுக்கின்றனர். இவர்கள் யாரென்றால் கட்சியில் உருப்படியான எந்தப் பதவியும் இல்லாதவர்கள். கட்சி சம்பந்தமாக எந்தவொரு கருத்தும் தெரிவிக்க முடியாதவர்கள். ஆனால் ஒருசில கோமாளி ஊடகங்கள் ஒரு சில கோமாளிகளை வைத்துக்கொண்டு தமிழரசுக் கட்சிக்குள் குழப்பங்கள் இருப்பதாக சமூகவலைத்தளங்கள், யூடியூப் சனல்களில் போலியான செய்திகளை வெளியிடுகின்றனர். இலங்கைத் தமிழரசுக் கட்சியானது இன்னும் ஒருசில மாதங்களில் பவளவிழாவை கொண்டாடும் அளவிற்கு ஒரு பழைமையான கட்சியாகும். அந்த பவளவிழாவை நடத்தும் பொறுப்பும் மட்டக்களப்பிற்குத் தரப்பட்டுள்ளது. அதனை மிகச்சிறப்பாக செய்வதற்கு நாங்கள் எத்தனிக்கின்றோம்.

75 வருடங்களாக இருக்கின்ற கட்சிக்கென்று சில கோட்பாடுகள், கட்டுப்பாடுகள், முறைகள் இருக்கின்றன. கடந்த ஒருசில வருடங்களாக கட்சியின் தலைவராக இருந்த மாவை சேனாதிராஜா அவர்கள் எந்தவொரு விடயத்திற்கும் உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்காமல் கட்சித் தீர்மானங்களை அவரே மீறி, கட்சிக்குள் கட்டுப்பாடுகள் இல்லாத வகையில் நான்கு வருடங்களாக கட்சியை கொண்டு சென்றதன் காரணமாகவே கட்சிக்குள் குழப்பங்கள் இருப்பதுபோல தெரிந்தது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியினுடைய புதிய தலைவராக கட்சியினுடைய மூத்த உறுப்பினர் சி.வி.கே.சிவஞானம் ஐயா அவர்களை தெரிவு செய்திருக்கின்றனர். கட்சியினுடைய அடுத்த மாநாடு வரை அவருக்கு அந்த அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இது குழப்பமான ஒரு செயற்பாடல்ல.கட்சி யாப்பின்படி கட்சியினுடைய விதிகளை மீறி கட்சிக்கு எதிராக செயற்பட்டவர்களை நீக்குவதற்கு யாப்பிலே இடமிருக்கின்றது.

ஜனாதிபதித் தேர்தலிலே கட்சித் தீர்மானத்திற்கு மாறாக தமிழரசுக் கட்சியை அழிக்க வேண்டும், உடைக்க வேண்டும் என்று நினைத்தவர்களுடன் இணைந்து கட்சிக்கு முரணாக நடந்துகொண்ட பொது வேட்பாளராக களமிறங்கிய அரியநேத்திரன் அவர்களை கட்சியிலிருந்து நீக்கியிருக்கின்றோம்.

இதனை ஒரு குழப்பம் என்று யாரும் சொல்ல முடியாது. இதனை கட்சியை சுத்தப்படுத்தும் ஒரு செயற்பாடாகவே பார்க்க வேண்டும். வைத்தியர் சிவமோகன் பாராளுமன்றத் தேர்தல் நடந்தபோது கட்சியினுடைய வேட்பாளருக்கு எதிராக பல போலியான குற்றச்சாட்டுகளை முன்வைத்து வன்னி மாவட்டத்தில் எமது கட்சிக்கு பின்னடைவு வரக்கூடிய வகையில் செயற்பட்டவர்.

வேறுசில முறைப்பாடுகளும் அவரைப்பற்றி வந்தது. அதனை ஊடகத்தில் நான் சொல்வது பொருத்தமில்லை. அந்த முறைப்பாடுகளை விசாரிக்கும் வரை அவரை இடைநிறுத்தியிருக்கின்றோம்.

## மட்டக்களப்பு...

அவற்றை தீர்ப்பதற்கு அரசாங்கம் உடனடி யாக நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் தெரிவித்தார்.

இதனை கருத்திற்கொண்ட மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் உடனடியாக

விஷேட குழுவொன்றினை அமைக்க இணக்கம் தெரிவித்தார்.

மேலும் மிக நீண்டகால மக்கள் குடியிருப்பு காணிகளை அரச காணிகளாக அண்மையில் மன்முனை வடக்கு பிரதேச செயலகத்தினால் அடையாளப்படுத்தப்பட்ட நிலையில், மட்டக்களப்பு மஞ்சந்தொடுவாய் பிரதேச காணிகளை மீண்டும் அந்தந்த மக்களுக்கான தனியார் காணிகளாக வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அதற்கான நடவடிக்கைகளை குறித்த குழு ஊடாக மேற்கொள்ள வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் ஹிஸ்புல்லாஹ் கோரிக்கை விடுத்தபோது அந்த கோரிக்கையும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாவட்ட அரசாங்க அதிபர் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் கலாநிதி ஜெயந்தலால் ரத்னசேகர, மற்றும் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட திணைக்களத் தலைவர்கள், முப்படைகளின் உயர் அதிகாரிகள், உள்ளிட்டோர் இதில் கலந்து கொண்டனர்.

## 16அடி முதலை...

காலை கரைக்கு வந்ததுடன் புளியந்தீவு கிராமத்திற்குள் நுழைய முற்பட்டபோது இதனை மடக்கிப் பிடித்த பொதுமக்கள் முதலையை வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

கடந்த சில நாட்களாக வாவிக் கரையோரப் பகுதியில் மேயும் ஆடு, மாடு உள்ளிட்ட கால்நடைகளை இந்த முதலை வேட்டையாடியுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். அண்மையில் வவுணதீவுப் பகுதியில் ஒருவர் முதலையால் தாக்கப்பட்டு அவர் இறந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த வாவியில் முதலை சஞ்சரிப்பதனால் மீனவர்கள் தமது ஜீவனோபாயத்தை முன்னெடுக்க முடியாதுள்ளது எனவும் இந்த முதலையை முதலைகள் சரணாலயத்திற்கு அனுப்பி வைக்குமாறும் வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளிடம் மீனவர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

## மின்சாரம்...

தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் நேற்றுமுன்தினம் (29) மாலை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர்கள் 16,22 மற்றும் 29 வயதுடைய மூவரும் புத்தளம் சோல்டன் மற்றும் மதீனா நகரைச் சேர்தவர்கள் என நுரைச்சோலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மாம்புரி பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மண்டப கட்டடத்தின் ஊழியர்கள் குழுவொன்று இரும்பு பலாஞ்சி ஒன்றின் மீது ஏறி கட்டிட வேலை செய்து கொண்டிருந்தனர்.

இதன்போது, மின்னோட்டத்துடன் கூடிய மின்சார வயர் பலாஞ்சியுடன் தொடர்பு கொண்டதால் இந்த சம்பவம் நிகழ்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நுரைச்சோலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## காணாமல்...

நடத்தப்பட்டது.

இதன்போது, காணாமல் ஆக்கப்பட்ட எமது பிள்ளைகள் எங்கே, இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டவர்களுக்கு நடந்தது என்ன?, ஐ.நாவே நீதியைப் பெற்றுத் தா, 15 வருடமாக போராடும் எமக்கு விடிவு இல்லையா என ஆர்ப்பாட்டக்காரர்கள் பல்வேறு கோஷங்களை எழுப்பியதுடன் காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளின் படங்களையும் தாங்கியிருந்தனர்.

இதன்போது அவர்கள் கருத்து தெரிவிக்கையில், நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறும் ஐ.நா அமர்வில் எமக்கான நீதியை பெற்றுத் தர ஐ.நா வலியுறுத்த வேண்டும். 2025 ஆம் ஆண்டிலாவது எமது 15 வருட போராட்த்திற்கு நீதி கிடைக்க வேண்டும் எனத் தெரிவித்தனர்.

இதில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## ஜனாதிபதி நிதியம்...

கட்டிடத்தின் தரைத்தளத்தில் நிறுவப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி நிதியத்தின் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக வரும் பொதுமக்கள்,2025 ஜனவரி 1 முதல், கொழும்பு 01, ஜனாதிபதி மாவத்தை, ஜனாதிபதி மாளிகைக்கு முன்பாக அமைந்துள்ள ஸ்டேண்டர்ட் சார்டர்ட் கட்டிடத்தின் தரைத்தளத்தில் உள்ள அலுவலக வளாகத்திற்குச் சென்று சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## இராணுவம்....

இது தொடர்பான நியமனக் கடிதங்கள் நேற்று (30) ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவினால் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டன.

இராணுவத் தளபதி ஜெனரல் விக்கும் லியனகே மற்றும் கடற்படைத் தளபதி அட்மிரல் பிரியந்த பெரேரா ஆகியோர் நாளை (31) தமது பதவிகளில் இருந்து ஓய்வு பெறுகின்றனர்.

## ஜிம்மி காட்டர்...

அண்மைய ஆண்டுகளில்,கல்லீரல் மற்றும் மூளைக்கு பரவிய மெலனோமா உட்பட பல உடல்நலப் பிரச்சினைகளால் தொடர்ந்தும் போராடி வந்தார்.எவ்வாறெனினும், பதவிக் காலத்திற்குப் பின் மற்ற எந்த அமெரிக்க ஜனாதிபதியையும் விட நீண்ட காலம் வாழ்ந்தவர் என்ற சிறப்பை கார்ட்டர் அடைந்தார்.

ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளை முன்னெடுப்பதைத் தவிர, சர்வதேச மோதல்களுக்கு அமைதியான தீர்வுகளைக் கண்டறிவதில் அவர் ஆற்றிய பங்களிப்புகளுக்காக 2002 இல் அமைதிக்கான நோபல் பரிசு அவருக்கு வழங்கப்பட்டது.

## 3 மாதங்களில்...

மற்றும் ஏனைய அரச அதிகாரிகளுடன் கலந்துரையாடி நாட்டை ஸ்திரப்படுத்துவதற்கு தெளிவான தீர்மானங்களை எடுக்க முடிந்தது.

வெளிநாட்டு இராஜதந்திரிகள் இலங்கையுடன் இணைந்து பணியாற்றத் தொடங்கியுள்ளனர்.

உள்நாட்டு மற்றும் சர்வதேச தொழில்முனைவோர் மற்றும் முதலீட்டாளர்களிடையே நாட்டின் மீதான நம்பிக்கை வலுவடைந்துள்ளது.

பங்குச் சந்தையும் அண்மைகாலமாக கடுமையான வளர்ச்சியை கண்டுள்ளது. ஸ்திரத்தன்மையை நோக்கிய பாதையில் இலங்கை நகர்கிறது என்பதை சர்வதேச சமூகம் ஏற்றுக்கொண்டுள்ளது" என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

### நெல்வயல்களின் அழிவு தொடர்பான கணக்கெடுப்பு முடிவு!

# நஷ்டஈடு விரைவில் வழங்க ஏற்பாடு; கமநல காப்புறுதி சபை அறிவிப்பு!

(முகம்மட் முக்தார்)

நாடளாவிய ரீதியில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக நெற்செய்கைக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் குறித்த மதிப்பீடுகள் முடிவடைந்து விட்டதாகவும் பாதிப்புக்களுக்கான கொடுப்பனவுகளை வழங்குவதற்கு கமநல காப்புறுதி சபை தயாராகி வருவதாகவும் கமநல காப்புறுதி சபை பொதுமுகாமையாளர் அறிவித்துள்ளார்.




வெள்ளப்பாதிப்புக்களால் முற்றாக சேதமடைந்த, பகுதியளவில் சேதமடைந்த நெற்காணிகள் தொடர்பான மதிப்பீடுகளை விவசாய அமைச்சின் அதிகாரிகளும் கமநல காப்புறுதி சபை அதிகாரிகளும் இணைந்த 15 குழுக்கள் மாவட்ட மட்டத்தில் மேற்கொண்டு அதற்கான அறிக்கையை தயார் செய்துள்ளதாகவும் மேற்படி சபை அறிவித்துள்ளது.

இது தொடர்பான கொடுப்பனவுகள் அடுத்த இரண்டு வாரங்களுக்குள் விவசாயிகளுக்கான வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்படுமெனவும் சபை அறிவித்துள்ளது. நாடளாவிய ரீதியில் சுமார் 82,000 ஏக்கர் நெற்காணிகள் முற்றாக சேதமடைந்துள்ளன.

சுமார் 1,20,000 ஏக்கர் நெற்காணிகள் பகுதி அளவிலும் சுமார் 50,000 ஏக்கர் நெற்செய்கை அல்லாத ஏனைய பயிர்களும் சேதமடைந்துள்ளமை மதிப்பீட்டின் மூலம் தெரிய வந்துள்ளதாகவும் மேற்படி சபை மேலும் அறிவித்துள்ளது. முற்றாக அழிவடைந்த நெற்காணிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 40,000 ரூபா வீதமும் ஏனைய பகுதியளவிலான அளவிலான அழிவுகளுக்கு விகிதாசார அடிப்படையிலும் கமநல சேவை காப்புறுதி சபையினால் நஷ்ட ஈட்டு கொடுப்பனவு வழங்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைய வெள்ளப்பாதிப்புக்களால் வடக்கு, கிழக்கு, வட மத்திய மாகாணங்களிலுள்ள அம்பாறை, மட்டக்களப்பு, பொலன்னறுவை, கிளிநொச்சி மாவட்ட நெல்வயல்கள் மிக கடுமையான அழிவுகளை எதிர்நோக்கியதாகவும் மதிப்பீடுகள் மூலம் தெரியவந்துள்ளன.

## உங்கள் ராசிபலன் எப்படி

குரோதி வருடம் மார்கழி மாதம் 16ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

**மேஷம்** இன்றைய நாள் சற்று மந்தமாக காணப்படும்.

**ரிஷபம்** இன்று நீங்கள் தைரியமாக சரியான பாதையில் செயல்பட வேண்டியது அவசியம்.

**மிதுனம்** நீங்கள் சுய முன்னேற்றப்பாதையில் செல்வீர்கள்.

**கடகம்** இன்று பண வரவு காணப்படலாம். உங்கள் செயல்களை முடிப்பதற்கு திட்டமிடுவீர்கள்.

**சிம்மம்** கவனக் குறைவு காரணமாக இன்றைய நாள் கடினமாக இருக்கும்.

**கன்னி** இன்றைய நாள் முன்னேற்றத்திற்கு உகந்த நாள் அல்ல.

**துலாம்** இன்று இனிமையான தருணங்கள் காத்திருக்கின்றன.

**விருச்சிகம்** இன்றைய நாள் மிகவும் அற்புதமான நாள்.

**தனுசு** புத்திசாலித்தனம் மற்றும் சமநிலை அணுகுமுறை வெற்றிக்கு வழிகாட்டும்.

**மகரம்** நீங்கள் உற்சாகமாகவும் ஆற்றலுடனும் இருப்பது நல்லது.

**கும்பம்** உங்கள் விருப்பங்கள் இன்று நிறைவேறும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

**மீனம்** பொதுவில் இன்றைய நாள் சிறப்பாக இருக்கும்.

## இன்றைய பஞ்சாங்கம்

**திதி:** இன்று காலை 05:03 வரை அமாவாசை பின்பு பிரதமை.
**நட்சத்திரம்:** இன்று அதிகாலை 01:12 வரை மூலம் பின்பு பூராடம்.
**யோகம்:** சித்த.
**சந்திராஷ்டமம்:** கிருத்திகை,ரோகிணி
**சூலம்:** வடக்கு.
**இராகு காலம்:** 03:00 PM முதல் 04:30 PM வரை.
**குளிகை:** 12:00 PM முதல் 01:30 PM வரை.
**எமகண்டம்:** 09:00 AM முதல் 10:30 AM வரை.




வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் நீதியைப் பெற்றுத் தருமாறு வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் நேற்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. யாழ்ப்பாணம் முனியப்பர் ஆலய முன்றலில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டமானது ஊர்வலமாக யாழ். பிரதான வீதி மற்றும் காங்கேசன்துறை வீதியூடாக சென்று யாழ் மத்திய பேருந்து நிலையத்தை அடைந்தது.

# 2025இல் 181 நாட்கள் மட்டுமே பாடசாலைகள் இயங்கும்

(முகம்மட் முக்தார்)

2025 ம் கல்வியாண்டில் பாடசாலை நடாத்தப்படும் நாட்களின் எண்ணிக்கை 181 நாட்கள் என கல்வி அமைச்சின் பாடசாலை செயற்பாட்டுக்கிளையின் மேலதிக செயலாளர்என்.ஆர்.காரியவாசம் அறிவித்துள்ளார்.

2024 ஆம் கல்வியாண்டு 2025 ம் ஆண்டின் முதல் 03 வாரங்களின் பின் ஜனவரி 02 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதிவரைநடைபெற்று முடிவடையவுள்ளது. இதன் காரணமாக 2025ஆம் ஆண்டில் முதல் மூன்று வாரங்களில் 16 பாடசாலை நாட்கள் இழக்கப்படுகிறது.

மேலும் 2025ஆம் ஆண்டில் 22 பொதுவிடுமுறை தினங்கள் வேலை நாட்களில் வருவதனால் அத்தினங்களில் பாடசாலை நடாத்தப்பட முடியாத நிலையும் உள்ளது. கல்வியமைச்சின் பாடசாலை தவணைக்கொள்கையின் ஒரு கல்வியாண்டில் 210 நாட்களுக்கு பாடசாலைகளை நடாத்த வேண்டி இருந்த போதிலும் மேற்குறிப்பிட்ட காரணங்களால் 2025ல் 181 நாட்கள் மட்டுமே பாடசாலைகள் நடாத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் இதற்குமுன்னர் குறைந்தது 196 நாட்கள் பாடசாலைகள் நடாத்தப்பட்டன எனவும் அவர் தெரிவித்தார். இந்த இக்கட்டான நிலையை கருத்திலெடுத்து பாடசாலை ஆசிரியர்கள் விடுமுறை எடுப்பதையும் குறைத்து, பாடசாலைகளில் வைபவங்கள் நடாத்தப்படுவதையும் குறைத்து கற்பித்தல் விடயத்தில் கூடுதலான கவனம் செலுத்த வேண்டுமென கல்வியமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது.

2020 ஆம் ஆண்டு கோவிட் தொற்றுக்கு பின் பாடசாலைகளின் தவணைகள் அந்தந்த வருடங்களுடன் முடிவடையாத நிலைமை காணப்பட்டது. எனினும் 2025 ஆம் கல்வியாண்டில் இந்தக் குறைபாடு முற்றாக நீக்கப்பட்டு 2025 ஆம் கல்வியாண்டு அவ்வருடத்துடன் முடிவுக்கு கொண்டு வரப்படவுள்ளதெனவும் அவர் தெரிவித்தார்.

# பெருவல வேலைத்திட்டம் பற்றி கலந்துரையாடல்



(வெலிகம நிருபர்)

நீண்ட காலமாக திக்குவல்லை மக்கள் எதிர் நோக்கி வருகின்ற வெள்ளப் பெருக்குக்கு நிரந்தர தீர்வு காணும் நோக்கில், "பெருவல" வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் அவசியம் பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அர்கம் இல்யாஸ் கலந்துரையாடுவதை காணலாம்.

# மாகாண சபைத் தேர்தலை, அடுத்த வருட நடுப்பகுதியில் நடத்த அரசாங்கம் திட்டம்

1988ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல் சட்டத்தின் கீழ், 2017ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தம்) சட்டத்தை இரத்துச் செய்வதன் மூலம் நீண்ட காலமாகத் தாமதமாகி வரும் மாகாண சபைத் தேர்தலை அடுத்த ஆண்டு நடுப் பகுதியில் நடத்துவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் மாதம் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சி சபைத் தேர்தலைத் தொடர்ந்து, திருத்தப்பட்ட மாகாண சபைத் தேர்தல் சட்டத்தை இரத்துச் செய்வதற்கான பிரேரணை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அரசு குறிப்பிட்டுள்ளது.

இந்த விடயம் சம்பந்தமாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் பிரதி அமைச்சர் பிரபா ருவான் செனரத் தெரிவிக்கையில்,

“2025 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில், மாகாண சபைத் தேர்தல் முறையில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட திருத்தங்களை இரத்துச் செய்து பழைய மாகாண சபைத் தேர்தல் முறைக்கு மாற்றுவதற்கான பிரேரணையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களுக்குப் பிறகே மாகாண சபைத் தேர்தல்களை எதிர்பார்க்க முடியும். எனினும், சட்டத்தில் பொருத்தமான திருத்தங்களை அறிமுகப்படுத்தாவிட்டால் நாங்கள் மாகாண சபைகளுக்கான தேர்தல் செயற்பாடுகளைத் தொடர முடியாது.

அதன் அடிப்படையில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் முன்னாள் அமைச்சரால் அறிமுகப்படுத்தப்பட்ட திருத்தங்களை முன்னெடுப்பதாக இருந்தால் நாடாளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட எல்லை நிர்ணய அறிக்கை அவசியமாகின்றது. ஆனால், அந்தச் செயற்பாட்டை முன்னெடுப்பதற்கு முழுமையாக முடிந்திருக்கவில்லை என்றார்.

முன்னதாக, 2017ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல்கள் (திருத்தம்) சட்டத்தின்படி, நாட்டின் பல்வேறு பிராந்தியங்களில் சமமான பிரதிநிதித்துவத்தை வழங்கும் குறிக்கோளுடன், எல்லைகளைத் அடையாளம் காண்பதற்காக ஜனாதிபதி எல்லை நிர்ணய ஆணைக்குழுவை நியமித்திருந்தார். இருப்பினும், எல்லை நிர்ணயத்தின் தேவை பல ஆண்டுகளுக்கு முன்பே அங்கீகரிக்கப்பட்டிருந்தாலும், எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் அறிக்கை இன்னும் நிறைவு செய்யப்படவில்லை. 2018இல் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான நியமிக்கப்பட்ட மீளாய்வுக் குழு, இரண்டு மாதங்களுக்குள் புதிய எல்லைகளை இறுதி செய்யவிருந்தது. ஆனால், அதன் அறிக்கையை உரிய காலத்தில் சமர்ப்பித்திருக்கவில்லை.

இதன் விளைவாக, 2017 மற்றும் 2018ஆம் ஆண்டுகளுக்கிடையில் ஆயுட்காலம் நிறைவுக்கு வந்திருந்த மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கு முடிந்திருக்கவில்லை.

2017ஆம் ஆண்டின் 17ஆம் இலக்கச் சட்டத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட 1988ஆம் ஆண்டின் 2ஆம் எண் மாகாண சபைகள் தேர்தல் சட்டத்தின் பிரிவு 3ஏ(1)இல் திருத்தம் அடிப்படையில் முன்னாள் அமைச்சர் பைசர் முஸ்தபா 2018இல் சமர்ப்பித்த எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் அறிக்கை ஏகமனதாக நிராகரிக்கப்பட்டதோடு பைசர் முஸ்தபாவே அதற்கு எதிராக வாக்களித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

### கிளிநொச்சியில் தெங்கு

# பயிர்ச் செய்கை சபையால் வெளியேற்றப்பட்ட மக்கள்

கிளிநொச்சியில் சுமார் 50 ஆண்டுகளாக வசித்த காணிகளில் இருந்து தமிழ்மக்கள் தெங்கு பயிர்ச் செய்கை சபையால் நேற்று (30) வெளியேற்றப்பட்டனர்.

குறித்த காணிகள் தெங்கு பயிர்ச் செய்கை சபைக்கு சொந்தமானவை என கிளிநொச்சி நீதவான் நீதிமன்று அளித்த கட்டளையையடுத்தே அங்கு வசித்தவர்களை வெளியேற்றும் நடவடிக்கை ஆரம்பமாகியது .

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட சோரன்பற்று கரந்தாய் பகுதியில் சுமார் 160 ஏக்கர் காணியில் 104 குடும்பங்களுக்கு சொந்தமாக இருந்தன. 1976 ஆம் ஆண்டு காணி சீர்திருத்த ஆணைக்குழுவால் மூன்று கட்டங்களாக குறித்த காணிகள் மக்களுக்கு பகிர்ந்து வழங்கப்பட்டிருந்தன. இங்கு வசித்த பலரின் காணி தொடர்பான ஆவணங்கள் போர்க் காலத்தில் அழிவுற்றிருந்தன. இந்நிலையில் 2006 ஆம் ஆண்டு சில குடும்பங்களுக்கு மீளவும் ஆவணங்கள் வழங்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில் குறித்த காணிகள் தமக்கு சொந்தமானவை என தெரிவித்து தெங்கு பயிர்ச் செய்கை சபை வழக்கு தொடர்ந்திருந்தது. கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கில் குறித்த காணிகள் தெங்கு பயிர்ச் செய்கை சபைக்கு உரியவை என்று மன்று அண்மையில் தீர்ப்பளித்தது.

குறித்த தீர்ப்புக்கு எதிராக பொதுமக்களால் வவுனியா மேல் நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டதனை தொடர்ந்து, குறித்த காணிகளில் இருந்து அந்தக் குடும்பங்களை வெளியேற்றும் பணிகளை தெங்கு பயிர்ச் செய்கை சபை ஆரம்பித்துள்ளது.

எனினும், முன்னதாக கிளிநொச்சி நீதவான் நீதிமன்றால் இதே பகுதியை சேர்ந்த சில குடும்பங்களுக்கு காணி உரித்துடையது என்று தீர்ப்பளிக்கப்பட்டமையும் இங்கே சுட்டிக் காட்டத்தக்கது.

# ஜேர்மன் அரசியல்வாதிக்கு இலங்கையில் ஓரின துணை

### எலான் மஸ்கின் கருத்தால் பரபரப்பு

(ஆர்.மனோசங்கர்)

எதிர்வரும் தேர்தலில் போட்டியிடும் பிரபல ஜேர்மனி அரசியல்வாதிக்கு இலங்கையில் ஓரினச் சேர்கையாளர் இருப்பதாக உலகின் முதல்நிலை செல்வந்தரான எலான் மஸ்க் தெரிவித்துள்ள கருத்து பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ஜேர்மனியில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில், ஜேர்மனியின் தீவிர வலதுசாரி கட்சியை ஆதரித்த பின்னர் மஸ்கின் கருத்துகள் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஜேர்மன் ஜனாதிபதியாக இருந்த ஓலாப் ஸ்கோல்ஸ் தலைமையிலான அரசாங்கம் அண்மையில் கவிழ்ந்தது. கடந்த 2021ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலில் ஓலாப் ஸ்கோல்ஸ் கூட்டணி அமைத்து ஆட்சி செய்தார். இந்நிலையில், அவர் கொண்டுவந்த பொருளாதார சட்டங்களுக்கு கூட்டணி கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்தன.அத்துடன், அவருக்கு வழங்கிய ஆதரவையும் மீளப் பெற்றன. இதனால் நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி ஓலாப் ஸ்கோல்ஸ் அரசாங்கம் மீது நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இவ்வாக்கெடுப்பில் தோல்வியடைந்தமையால் ஓலாப் ஸ்கோல்ஸ் தலைமையிலான அரசு கவிழ்ந்தது. ஜேர்மன் அரசியலமைப்பு சட்டப்படி நாடாளுமன்றத்தை கலைக்க உத்தரவிடப்பட்ட பின்னர் பெப்ரவரி 23ஆம் திகதி தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஜேர்மனி ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில், ஜேர்மனிக்கான மாற்று அல்லது யுகனு கட்சியை ஆதரிப்பதாக எலோன் மஸ்க் தெரிவித்துள்ளார். “ஜேர்மனிக்கான மாற்று (AfD) இந்த நாட்டிற்கான நம்பிக்கையின் கடைசி தீப்பொறி” என்று மஸ்க் தெரிவித்துள்ளார். தீவிர வலதுசாரி கட்சி “பொருளாதார செழிப்பு, கலாசார ஒருமைப்பாடு மற்றும் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள் யதார்த்தமும் கொண்ட ஒரு எதிர்காலத்திற்கு நாட்டை இட்டுச் செல்ல முடியும்” என்று அவர் மேலும் கூறினார். ஜேர்மனியில் தான் செய்துள்ள முதலீடு நாட்டின் நிலை குறித்து கருத்து தெரிவிக்கும் உரிமையை தனக்கு வழங்கியதாகவும் எலான் மஸ்க் சுட்டிக்காட்டியுள்ளார். “AfDI வலதுசாரி தீவிரவாதியாக சித்தரிப்பது தவறானது என்றும் கட்சியின் தலைவரான ஆலிஸ் வீடல் இலங்கையைச் சேர்ந்த ஒரு ஓரினச்சேர்க்கையாளரைக் கொண்டிருப்பதைக் கருத்தில் கொண்டு, அது உங்களுக்கு ஹிட்லரைப் போலத் தோன்றுகிறதா? என்றும் கேள்வியெழுப்பியுள்ளார்.

எவ்வாறாயினும், மஸ்கின் விமர்சனம் ஜேர்மன் ஊடகங்களில் பேச்சு சுதந்திரத்தின் எல்லைகள் குறித்து ஒரு விவாதத்திற்கு வழிவகுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஒருவனின் நோக்கில்...

No. 752/5, Dr Danister De Silva Mawatha,
Second Floor, Bellatrix Building, Colombo 09
0114701510 / editorial@oruvan.com

## 2024 - பழையன கழிதல்; விடைபெறுகிறாயோ...!

நாட்கள் நகர்ந்தாலும் சில நினைவுகள் மனதிலிருந்து அகல்வதில்லை.

ஆண்டுகள் கடந்தாலும், அழியாத வடுக்களாக சிலதும், நினைத்தாலே இனிப்பவையாக சிலதும், இதுபோன்று நினைக்கவே முடியாதவையாக இன்னும் பலதும். எம்மனங்களில் நிலைப்பதுண்டு.

இப்படி எத்தனை ஆண்டுகளை எம் வாழ்நாட்கள் கடந்து விட்டன. கடந்துபோன ஆண்டுகளில் எமது எண்ணங்கள் எங்கெல்லாம் சிறகடித்துக் கிளம்பின.இவற்றின் நினைவுகள் எமக்கு பல படிப்பினைகளையும் ஏமாற்றங்களையுமே பரிசளித்துள்ளன. இந்நிலையில், நாளை பிறக்கும் இந்தப் புத்தாண்டு (2025) எப்படியிருக்கும்? இந்த எண்ணங்களில் மிதந்தவாறே நமது எதிர்பார்ப்புக்கள் இருக்கப்போகின்றன. இந்த நிலையில், எல்லோரது தனிப்பட்ட எதிர்பார்ப்புக்களும் அவரவர் எண்ணங்களுக்கு ஏற்ப ஈடேறப் பிரார்த்திக்கிறோம்.

2024 ஆம் ஆண்டில் எல்லோருக்கும் எதிர்பார்ப்பொன்று இருந்ததையும் குறிப்பிட்டாக வேண்டும். செப்டம்பர் 21 ஜனாதிபதித் தேர்தலும் நவம்பர் 14 பொதுத் தேர்தலுமே அவை.

மக்களிடையே பலத்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்த இந்தத் தேர்தல்கள், பாரிய திருப்புமுனைக்கும் வித்திட்டிருந்தது. முதலாளித்துவ ஆட்சியில் வெறுப்புற்ற மக்களுக்கு சுரண்டல்கள், ஊழல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களிலிருந்து விடுபடும் தேவை ஏற்பட்டது. இதனால்தான், மிகப்பலமான எதிர்க்கட்சிகள், கனதியான வேட்பாளர்களையும் விஞ்சி வெல்லுமளவுக்கு தேசிய மக்கள் சக்தி எழுச்சி பெற்றிருந்தது. ஆனாலும், இந்த எழுச்சி உணர்ச்சிகரமானதா? அல்லது யதார்த்தமானதா? என்ற சிந்தனைகள் முளைவிடும் வகையில், தற்போதைய கள நிலைமைகள் காட்சி தருகின்றன. ஆட்சிக்கு வந்து மூன்றே மாதங்களாகும் நிலையில், கடந்த 2024 ஆம் ஆண்டின் ஏமாற்றங்கள் மற்றும் எதிர்பார்ப்புக் களுக்கு தீர்வை எதிர்பார்க்க முடியாதுதான். இருந்தாலும், நம்பிக்கை ஏற்படுமளவுக்கு அரசாங்கத்தின் நகர்வுகள் உள்ளதா? இதையே மக்கள் சிந்திக்கத் தொடங்கியுள்ளனர்.

"சிஸ்டம் ஜேன்ஜி" என்பது எதைக் குறிக்கிறது.அரச இயந்திரத்தின் செயற்பாடுகளில் மாற்றம் ஏற்படுவ தையா ? அல்லது அரசியல் பழிவாங்கல்களை மாத்திரமா? பழிவாங்கல்களுக்காக மேற்கொள்ளப்படும் அரசின் சில நடவடிக்கைகள் சிலருக்கு படிப்பினையாக இருக்கும் என்பது உண்மையே!

இந்தக் கைதுகளால் அரச இயந்திரத்தின் செயற்பாடுகளில் ஏற்படச் சாத்தியமான மாற்றங்கள் என்ன? வாரிசு அரசியலை ஒழித்தல், ஊழலை அழித்தல், அதிகார துஷ்பிரயோகங்களை ஒழித்தல் மற்றும் நிதி வீண் விரயங்கள், இன்னும் வீண் செலவுகளை தவிர்த்தல் என்பவையும் மக்களுக்கான சேவைகளை திறன்படச் செய்து முடிப்பதும்தான் "சிஸ்டம் சேன்ஜ்"

வறுமையிலிருந்து விடுபட்டு பொருளாதாரம் செழிப்படைய வேண்டுமென 2024 இல், எதிர்பார்த்த மக்கள் இன்னும் கடந்த ஆண்டின் விலைகளுக்கே பொருட்களைக் கொள்வனவு செய்கின்றனர். நீர்க் கட்டணம், மின்சாரக்கட்டணம் போன்ற அத்தியாவசிய பாவனைகளுக்கான கட்டணங்கள் கடந்த 2024 இல், செலுத்தப்பட்டதுபோன்றே இந்த புதிய வருடத்திலும் (2025) செலுத்த நேரிடப்போகிறதோ என அங்கலாய்க்கின்றனர். மரக்கறிகளின் விலைகளும் நிலையின்றி தளம்புகின்றன. காலநிலையால் ஏற்பட்ட அழிவுகள் இன்னும் வன ஜீவராசிகளால் ஏற்பட்ட நஷ்டங்கள் என்பவை, மரக்கறிகளில் தட்டுப்பாடுகளை ஏற்படுத்தியிருக்கலாம். கடந்த 2023 முதல் 2024 வரை வனஜீவராசிகளால் தெங்கு, வாழை மற்றும் மரக்கறிச் செய்கைகளில் ரூபா 55.3 பில்லியன் நஷ்டம் ஏற்பட்டதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

உல்லாசப் பயணிகளின் வருகை அதிகரித்து நுகர்வுத் தேவை உச்சளவில் சென்றுள்ளமையும் விலை உயர்வுகளுக்கான காரணங்களாகக் காட்டப்படுகின்றன. விலைகளில் தளம்பல்கள் ஏற்படுவதை விடவும் வெவ்வேறு இடங்களில், வெவ்வேறு விலைகளில் பொருட்கள் விற்கப்படுவதும் அரச இயந்திரச் செயற்பாட்டின் பலவீனத்தையே எடுத்துக் காட்டுகிறது

இந்நிலைமைகளிலிருந்து விரைவில் மீளும் அளவுக்கு நாட்டின் பொருளாதார நிலைமைகள் இல்லையெனப்படும் விவாதம் ஏற்புடையதல்ல. கடந்த 2024 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் 380 ஷருவாக இருந்த அமெரிக்க டொலரின் பெறுமதி இப்புது வருடத்தில் 280 ரூபாவாக குறைந்துள்ளது. எமது நாட்டின் நாணயப் பெறுமதி உயர்ந்தும், பெறுமதி உயர்வுக்கு ஏற்ப இறக்குமதிப் பொருட்களின் (எரிபொருள், கோதுமை) விலைகள் குறையவில்லை.

இதையும் அரச இயந்திரத்தின் வினைத்திறன் குறைபாடாகவா கருதுவது? இதனால்,கடந்த ஆண்டில் 2024 எதிர்பார்த்த "சிஸ்டம் சேன்ஜ்" ஏற்படவில்லையா? இவ்வாறான வினாக்களின் ஆக்கிரமிப்புக்கள் மக்களது மனங்களைத் தூண்டிவிடாமல் செயற்படுவதுதான், இப்புதிய அரசுக்கு இப்புதிய ஆண்டில் 2025 ஏற்படப்போகும் புதிய சவாலாக மாறி வருகிறது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க கடந்த ஆண்டின் 2024 டிசம்பர் 15,16 ஆம் திகதிகளில் மேற்கொண்டிருந்த இந்திய விஜயம், தேசிய மக்கள் சக்தி எதிர்பார்த்த ராஜதந்திர நகர்வுகளில் அதிர்வுகளை ஏற்படுத்தவில்லை. இந்திய தலையீட்டால் ஏற்பட்ட அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் இன்னும் மாகாணசபை முறைகளில் மாற்றத்தை ஏற்படுத்துவதாகவே, தேசிய மக்கள் சக்தி தேர்தல் மேடைகளில் முழங்கியது. ஆனாலும் இந்திய விஜயத்தின் பின்னர், இவ்விடயத்தை கபட மௌனமாக அராசங்கம் கையாளத் தொடங்கியது. விட்டில்பூச்சி விளக்கில் விழுவதைப்போல ராஜதந்திர நெருக்கடிக்குள் விழத்தேவையில்லை என்பதால், அரசாங்கத்தின் இந்த மௌனம் நீடிக்கிறது. எனினும், இந்த மௌனம் ஜனாதிபதி இவ்வருடம் (2025) ஜனவரியில் சீனாவுக்கு மேற்கொள்ளவுள்ள விஜயத்தால் கலைக்கப்படலாம். திருமலை எண்ணெய்க்குதங்களை குறிவைக்கும் வேவு விமானங்களின் செயற்பாடுகளால், தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் பரபரப்புக்களுக்கு மத்தியிலேயே ஜனாதிபதியின் சீன விஜயமும் அமையவுள்ளது. இந்நிலையில், நாளை பிறக்கும் புதிய வருடம், மாற்றங்களை நிறைவேற்றும் ஆண்டாக அமைய இதயத்தில் இருந்து வாழ்த்துகிறோம்.



# ஜிம்மி கார்ட்டர்

# அமைதியின் ஹீரோ

## 100 ஆவது வயதில் காலமானார்!



ஜெயராம் அனோஜன்

1977 முதல் 1981 ஆம் ஆண்டு வரை அமெரிக்காவின் 39 ஆவது ஜனாதிபதியாக பணியாற்றிய ஜிம்மி கார்ட்டர் (Jimmy Carter), தனது 100 ஆவது வயதில் ஜோர்ஜியாவில் உள்ள அவரது வீட்டில் காலமானார் என்று அமெரிக்க ஊடகத்தை மேற்கோள்காட்டி ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

தனது மனிதாபிமானப் பணிக்காக அமைதிக்கான நோபல் பரிசை வென்ற கார்ட்டர், இஸ்ரேலுக்கும் எகிப்துக்கும் இடையே சமாதானத்தை ஏற்படுத்திய பெருமைக்குரியவர்.

ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த கார்ட்டர், 1976 அமெரிக்கத் தேர்தலில் குடியரசுக் கட்சியின் ஜெரால்ட் ஃபோர்டை தோற்கடித்து வெள்ளை மாளிகைக்குள் நுழைந்தார்.

முன்னதாக கலிபோர்னியா ஆளுநராக பணியாற்றிய நடிகரும் அரசியல்வாதியுமான றொனால்ட் ரீகனால் 1980 தேர்தலில் கார்ட்டர் தோற்கடிக்கப்பட்டார்.

கார்ட்டரின் மறைவு குறித்து அவரது புல்வர்சிப் கார்ட்டர் இட்டுள்ள பதிவொன்றில், "என் தந்தை எனக்கு மட்டுமல்ல, அமைதி, மனித உரிமைகள் மற்றும் தன்னலமற்ற அன்பில் நம்பிக்கை கொண்ட அனைவருக்கும் ஒரு ஹீரோ" என்று கூறியுள்ளார்.

கார்ட்டர், அண்மைய ஆண்டுகளில், கல்லீரல் மற்றும் மூளைக்கு பரவிய மெலனோமா உட்பட பல உடல்நலப் பிரச்சினைகளால் தொடர்ந்தும் போராடி வந்தார்.

அவர் 2023 ஆம் ஆண்டில் தீவிர நோய்வாய்ப்பட்டவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தும் ஒரு வகை சுகாதாரப் பராமரிப்பைப் பெற முடிவு செய்தார்.

மேலும் கூடுதல் மருத்துவ தலையீட்டிற்கு உட்படுத்த வேண்டாம் என்றும் அவர் தீர்மானித்திருந்தார்.

2023 நவம்பர் 19 அன்று, 96 வயதில் உயிரிழந்த அவரது மனைவி ரோசலின் கார்டரின் இறுதிச் சடங்கில் அவர் கலந்து கொண்டார்.

இதன்போது அவர் பலவீனமான நிலையில் சக்கர நாற்காலியில் அமர்ந்திருந்தார்.



எவ்வாறெனினும், கார்ட்டர் தனது பதவிக் காலத்திற்குப் பின்னர், மற்ற எந்த அமெரிக்க ஜனாதிபதியையும் விட நீண்ட காலம் வாழ்ந்தவர் என்ற சிறப்பை அடைந்தார்.

ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளை முன்னெடுப்பதைத் தவிர, சர்வதேச மோதல்களுக்கு அமைதியான தீர்வுகளைக் கண்டறிவதில் அவர் ஆற்றிய பங்களிப்புகளுக்காக 2002 இல் அமைதிக்கான நோபல் பரிசு அவருக்கு வழங்கப்பட்டது.

ஓவல் அலுவலகத்தில் (அமெரிக்க ஜனாதிபதியின் அதிகாரப்பூர்வ அலுவலகம்) அவர் நான்கு ஆண்டுகள் பணியாற்றியது இஸ்ரேலுக்கும் எகிப்துக்கும் இடையே 1978 ஆம் ஆண்டு கேம்ப் டேவிட் உடன்படிக்கைகளுக்கு பெரும் பங்களிப்பை நல்கியது.

இது இரு நாடுகளுக்கு இடையில் சமாதானத்தை ஏற்படுத்தியதுடன், மத்திய கிழக்கில் ஸ்திரத்தன்மையைக் கொண்டுவரவும் உதவியது.

எனினும் ஒரு பொருளாதார மந்தநிலை, அவரது செல்வாக்கற்ற தன்மை மற்றும் 1979 ஈரான் பணயக்கைதிகள் நெருக்கடி ஆகியவை அவருக்கு எதிராக ஒரு சூழ்நிலையை உருவாக்கியது.

மேலும் அவர் 1980 அமெரிக்க தேர்தலில் ரீகனிடம் தோற்று வெளியேற்றப்பட்டார்.

அவரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்து, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் முதல் பெண்மணி ஜில் பைடன் ஆகியோர் அதிகாரப்பூர்வ அறிக்கையை வெளியிட்டனர் மேலும் அதில், கார்டரை "அசாதாரண தலைவர், அரசியல்வாதி மற்றும் மனிதாபிமானவாதி" என்றும் நினைவு கூர்ந்தனர்.

அதேநேரம் அமெரிக்க ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட டொனால்ட் டிரம்ப், கார்ட்டர் தனது பதவிக்காலத்தில் தான் எதிர்கொண்ட துன்பங்களுக்கு மத்தியிலும் அனைத்து அமெரிக்கர்களின் வாழ்க்கையை மேம்படுத்த பாடுபட்ட தலைவர் என்று கூறினார்.

கார்ட்டர் ஒரு பிரபலமற்ற ஜனாதிபதியாக பதவியை விட்டு வெளியேறினார், ஆனால் அவரது பதவிக்காலத்திற்குப் பின்னர், அவர் மனிதாபிமான காரணங்களுக்காக பல தசாப்தங்களாக ஆர்வத்துடன் பணியாற்றினார்.

அடுத்த ஆண்டுகளில், கார்ட்டர் ஒரு மனித உரிமை சம்பியனாக சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றார், மேலும் பின்தங்கியவர்களுக்கான குரலாக பிரபலமடைந்தார்.

அவர் பசி மற்றும் வறுமைக்கு எதிரான போராட்டத்தை வழிநடத்தினார் மற்றும் முன்னோடியில்லாத புகழ் பெற்றார், இது ஜனாதிபதியாக கூட அவரால் அடைய முடியாத பெருமிதமானது.



# அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி கையெழுத்து வேட்டை







(எஸ்.ஆர்.லெம்பேட்)

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி மன்னாரில் கையெழுத்து வேட்டை நேற்று திங்கட்கிழமை காலை (30) இடம்பெற்றது. போராளிகள் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் மன்னார் பஸ் தரிப்பிடத்தின் முன்பாக கையெழுத்து வாங்கும் நடவடிக்கை இடம்பெற்றது. பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளையும் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சமூகமயப்படுத்தப்பட்ட பின்னர் நீதி மன்றத்தினால் விடுதலை செய்யப்பட்ட பின்பும் மீண்டும் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள போராளிகளையும் புதிய அரசாங்கம் விடுவிக்க வேண்டும் என வலியுறுத்தி கையெழுத்து வேட்டை இடம்பெற்றது. இதில் அருட் தந்தையர்கள்,பொது அமைப்புகளின் பிரதிநிதிகள்,மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகள் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு கையெழுத்திட்டனர்.




(பு.கஜிந்தன்)

வண்ணையம்பதி ஶ்ரீ வேங்கடேச வரதராஜப்பெருமாள் தேவஸ்தானத்தின் ஸ்ரீ ஆஞ்சநேய ஜனனதின உற்சவம் நேற்று பக்திபூர்வமாக நடைபெற்றது.

கருவறையில் அருள் பாலித்து விளங்கும் ஸ்ரீ வேங்கட வரதாஜப்பெருமாள், சீதேவி, பூமாதேவி ஆகிய தெய்வங்களுக்கு விஷேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று அதனை தொடர்ந்து ஸ்ரீ ஆஞ்சநேயருக்கு தீபாராதனைகள், 108 மாந்திர அர்ச்சனைகள் இடம்பெற்று நைவேத்தியங்களும் படைக்கப்பட்டன.

இவ் கிரியைகளை ஆலயபிரதம குரு சிவஸ்ரீ செ.ரமணிதரக் குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியர்கள் நடாத்தி வைத்தனர்.

# சமாதான பேரவையின் கிறிஸ்மஸ் நிகழ்வு



(கி.வசந்தன்)

வவுனியா மாவட்ட சமாதான பேரவையின் கிறிஸ்மஸ் நிகழ்வு சிறப்பான முறையில் வவுனியா, சிதம்பரபுரம் பகுதியில் நடைபெற்றது.

இலங்கை தேசிய சமாதான பேரவையின் திட்டத்தின் கீழ் வவுனியா மாவட்ட சர்வமத பேரவையின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஆர். விக்கினேஸ்வரன் தலைமையில் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த கிறிஸ்மஸ் நிகழ்வில் கத்தோலிக்க, இந்து, பௌத்தம், இஸ்லாம் மதத் தலைவர்கள் கலந்து கொண்டதுடன், தமிழ், சிங்கள, கிறிஸ்தவ, இஸ்லாமிய மாணவர்களால் அனைத்து மதங்களையும் பிரதிநிதித்துவப்படுத்திய கலை நிகழ்வுகளும் நடைபெற்றன.

இதன்போது கிறிஸ்மஸ் தினத்தை முன்னிட்டு பரிசுப் பொருட்களும் கலந்து கொண்டவர்களுக்கு வழங்கப்பட்டன. நிகழ்வில் மதத்தலைவர்கள், மாணவர்கள், கிராம மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# தமிழ்ச்செல்வன் தாக்கப்பட்டமைக்கு யாழ்ப்பாண ஊடக மன்றம் கண்டனம்

(பு. கஜிந்தன்)

கிளிநொச்சி மாவட்டத்திலே ஊடகத்துறையில் பணியாற்றி வருகின்ற முருகையா தமிழ்ச்செல்வன் கடந்த 27ஆம் திகதி இனம் தெரியாத சிலரால் தாக்கப்பட்டுள்ளார். அதற்கு யாழ். ஊடக மன்றம் வன்மையான கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

அந்த அமைப்பு அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளதாவது.

கடந்த காலங்களிலே குறிப்பாக யுத்த காலத்திலும் அதற்குப் பிந்திய காலத்திலும் 20 வருடங்களுக்கு மேலாக தமிழ் மக்களின் இனப்பிரச்சினை, நில அபகரிப்பு, சட்டவிரோத போதைப்பொருள், அரச முறைகேடுகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்களைத் தனித்துவமாகத் துணிச்சலுடன் வெளிக்கொண்டு வந்தவர். இவ்வாறு பக்கச் சார்பின்றி துணிச்சலாகச் செயற்பட்டு வந்த ஊடகவியலாளர் முருகையா தமிழ்ச்செல்வன் தனது ஊடகப் பணியை முடித்துவிட்டுச் சென்ற வேளை இனம் தெரியாதோரால் மறிக்கப்பட்டுக் கடத்திச் செல்ல முற்பட்டுள்ளனர். இதிலிருந்து அவர் தப்பிச் சென்ற போது அவர் மீது தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான தாக்குதல்கள் ஊடகப் பரப்பிலேயே அச்சுறுத்தலையும் உண்மைத் தன்மையை வெளிக் கொண்டு வருபவர்களுக்கு விடுக்கப்படுகின்ற சவாலாகவும் இருந்து வருகிறது. ஊடக பரப்பில் பணியாற்றுபவர்களின் உத்வேகத்தை முடக்குகின்ற இவ்வாறான திட்டமிட்ட செயல்கள் தொடர் கதையாகவே உள்ளது

இவ்வாறு பக்கச் சார்பற்ற விடயங்களை வெளிக்கொண்டுவரும் ஊடகவியலாளர்கள் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றமை அதிகரித்து வருகிறது. வடக்கு, கிழக்கு மாகாணங்களை இலக்கு வைத்தே இத் தாக்குதல்கள் அரங்கேறுகின்றன.

தற்போது புதிய அரசாங்கம் ஒரு அரசியல் மாற்றத்தை ஏற்படுத்துவதாக ஆட்சிக்கு வந்த போதிலும் இவ்வாறான தாக்குதல்கள், மிரட்டல்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எவ்வாறாயினும் சம்பந்தப்பட்ட புதிய அரசு இவ்வாறான விடயங்களில் கரிசனை காட்ட வேண்டும். அத்துடன் இச்சம்பவங்கள் தொடர்பில் நீதியான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்றும் யாழ். ஊடக மன்றம் மிகவும் வினயமாகக் கேட்டுக்கொள்கின்றது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வவுனியா - பூவரசன்குளத்தில் துப்பாக்கி,கோடாவுடன் ஒருவர் கைது

(கி.வசந்தன்)

வவுனியா, பூவரசன்குளம் பகுதியில் உள்நாட்டுத் துப்பாக்கி மற்றும் 18,000 மில்லி மீற்றர் கோடாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பூவரசன்குளம் பொலிசார் நேற்று (30) தெரிவித்தனர்.

வவுனியா, பூவரசன்குளம் பொலிசாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து இரண்டாம் செங்கல்படை பகுதியில் விசேட சுற்றி வளைப்பு ஒன்றை பூவரசன்குளம் பொலிசார் மேற்கொண்டனர். இதன்போது உள்நாட்டு துப்பாக்கி மற்றும் பெரல் ஒன்றில் அடைக்கப்பட்டிருந்த கசிப்பு உற்பத்திக்கான 18,000 மில்லிலீற்றர் கோடா என்பன மீட்கப்பட்டதுடன், அதனை உடைமையில் வைத்திருந்த நபரும் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவரை மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பூவரசன்குளம் பொலிசார் தெரிவித்தனர்.



# பனை மரங்களை வெட்டியவருக்கு வழக்குத் தாக்கல்



(பு.கஜிந்தன்)

அனுமதிப்பத்திரமின்றி யாழில் சட்டவிரோதமாகப் பனை மரங்களை வெட்டியவர்கள் மீது நேற்று வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இருபாலை மற்றும் நீர்வேலிப்பகுதியில் நேற்று அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாகப் பனை மரங்கள் வெட்டப்பட்டுள்ளன. இந்த நிலையில் பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் வி. சகாதேவனின் நேரடியான அதிரடி கண்காணிப்பு நடவடிக்கையில் பனை மரங்களை வெட்டியவர்கள் மீது சட்ட நடவடிக்கையின் பிரகாரம் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதேவேளைக் கடந்த ஞாயிற்றுக்கிழமை தனங்கிளப்புப் பகுதியில் சட்டவிரோதமாகப் பனை மரங்களை வெட்டியவர்கள் மீதும் வழிக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகப் பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

மேலும் விடுமுறை நாட்களான சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இவ்வாறு சட்டவிரோதமாகப் பனை மரங்கள் வெட்டப்படுவதாகவும் தெரிவித்த அவர் பனை வளங்களைப் பாதுகாக்கும் நோக்கில் தாம் விரைந்து செயற்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, மக்கள் தமது தேவைகளுக்குப் பனை மரங்களை வெட்டுவதற்குப் பொருத்தமான பனை மரங்களைப் பாதுகாக்கும் நோக்கோடு கூடிய திட்டம் ஒன்று விரைவில் அறிமுகப்படுத்தப்பட இருப்பதால் அதுவரை மக்கள் ஒத்துழைப்பு வழங்குமாறும் தாழ்மையான வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளதுடன் எந்தப் பகுதியிலாவது பனை மரங்கள் வெட்டுவதை அறிந்தால் மக்கள் உடனடியாக 0779273042 என்ற தொலைப்பேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு தெரியப்படுத்துமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# சௌத்பார் கடற்பரப்பில் ஆணின சடலம் மீட்பு



(எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் சௌத் பார் கடற்பரப்பில் மிதந்து வந்த சடலம் ஒன்றை நேற்று (30) காலை மன்னார் பொலிஸார் மீட்ட நிலையில், சடலமாக மீட்கப்பட்டவர் காணாமல் போன சாந்திபுரம் பகுதியை சேர்ந்த 59 வயதுடைய கூலித் தொழிலாளி என அவரின் உறவினர்களினால் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மன்னார் சாந்திபுரம் பகுதியைச் சேர்ந்த சதாசிவம் ராசு (வயது-59) என்ற குடும்பஸ்தர் கடந்த 28 ஆம் திகதி முதல் காணாமல் போன நிலையில் அவரை குடும்ப உறவினர்கள் தேடி வந்துள்ளனர்.

இந்த நிலையில் கூலித்தொழிலாளியான குறித்த நபர் திங்கட்கிழமை(30) மன்னார் சௌத் பார் கடற்பரப்பில் சடலமாகக் காணப்பட்டார். மீனவர்கள் கடற்படையினருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் சடலத்தை மீட்ட கடற்படையினர் சௌத் பார் கடற்கரைக்குக் கொண்டு வந்தனர்.

பின்னர் சம்பவ இடத்திற்கு வருகை தந்த மன்னார் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த போது சடலமாக மீட்கப்பட்டவர் மன்னார் சாந்திபுரம் பகுதியைச் சேர்ந்த சதாசிவம் ராசு (வயது-59) என உறவினர்களினால் அடையாளம் காணப்பட்டார்.

சடலம் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# 2024 ஆம் ஆண்டில்
# உலக கவனத்தை ஈர்த்த புகைப்படங்கள்



ஜூலை மாதம், ஜனாதிபதி தேர்தல் பிரசார கூட்டத்தில், தனது வலது காதில் தோட்டா துளைத்ததைத் தொடர்ந்து, இரத்தக்கறை படிந்த முகத்துடன் தனது கரத்தை உயர்த்தியபடி தோன்றும் டொனால்ட் ட்ரம்பின் புகைப்படம் வரலாற்றில் பதிவுசெய்யப்பட்டது. அந்த நேரத்தில் அவருக்குப் பின்னால் இருந்த கொடி, அவர் தேர்தலில் வெற்றி பெற்ற தருணமோ என்று பலரையும் வியக்க வைத்தது.



கோடையில் காஸாவின் 90% மக்கள் (சுமார் 20 லட்சம் மக்கள்) போரினால் இடம்பெயர்ந்தனர். பெப்ரவரி 29 அன்று தெற்கு காஸாவில் நெரிசலான அகதிகளின் கூடாரங்களை அலங்கரிக்கும் விதமாக இரண்டு பலஸ்தீன சிறுமிகள், ரமழான் பண்டிகைக்குத் தயாராகி, விளக்குகளை ஏற்றினர். அந்த விளக்குகளின் பிரகாசம், தொலைதூரத்தில் மறையும் சூரியனின் அமைதியற்ற இருளுக்கு எதிராக நின்றது.



இந்தோனேசிய எரிமலையான மவுண்ட் ருவாங், ஏப்ரலில் பலமுறை வெடித்து, சூடான எரிமலைக் குழம்புகளையும், சாம்பலையும் உமிழ்ந்தது. இது அச்சுறுத்தும் வகையில் இருந்தாலும் பார்வையாளர்களையும் ஈர்ப்பதாக அமைந்ததால் இப் புகைப்படம் பிரபல்யமாகியது.



நியூயோர்க்கில் இந்த ஆண்டின் மே மாதத்தில், தனது புதிய ஆல்பமான ”ஹிட் மீ ஹார்ட் அண்ட் சாஃப்ட்” ஆல்பத்தை பில்லி எலிஷ் வெளியிட்டார். அந்த விழாவில், எடுக்கப்பட்ட பில்லி எலிஷ ின் புகைப்படம், ஒளி மற்றும் புகையால் சூழப்பட்டு, கனவில் கரைவது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தியது. அவரது உடல் மங்கலாகி, ஏறக்குறைய, கண்ணுக்குத் தெரியாத நிழற்படத்தை உருவாக்கியது.



சிரியாவில் பஷார் அல் ஆஸாத் குடும்பம் நாட்டைவிட்டு வெளியேறியதைத் தொடர்ந்து, அந்த நாட்டின் பல்வேறு நகரங்களில் இருந்த பஷர் அல் ஆஸாத்தின் தந்தையான ஹஃபீஸ் அல் ஆஸா த்தின் சிலைகள் வீழ்த்தப்பட்டன. டிசம்பர் 9 அன்று, இடிக்கப்பட்ட சிலையை காலால் உதைத்து ஒரு பிரிவினர் தங்களது அதிருப்தியை வெளிப்படுத்தினர்.



நியூயோர்க்கில் ஏப்ரல் மாதம் 350 இற்கும் மேற்பட்ட நடனக் கலைஞர்கள் ஒன்றுகூடி, ஒரே நேரத்தில் கின்னஸ் சாதனை படைத்தனர். பங்கேற்பாளர்களில் பலர் போட்டிக்கு ஆர்வத்துடன் தயாராகிக் கொண்டிருக்கும் புகைப்படம் அந்த முக்கியமான சந்தர்ப்பத்தின் நேர்த்தியையும் ஆற்றலையும் வெளிப்படுத்தியது.



தென்கொரிய எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சியின் செய்தித் தொடர்பாளர் அஹ்ன் க்வி-ரியோங், சுடுவதற்குத் தயார் நிலையில் இருந்த ஒரு வீரரின் துப்பாக்கியை தைரியமாகப் பிடித்ததையே புகைப்பம் காண்பிக்கிறது. அதிபர் யூன் சுக் யோல் இராணுவ சட்டத்தை அறிவித்த சிறிது நேரத்திலேயே இந்தச் சம்பவம் நடந்தது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்திற்கு வருவதைத் தடுக்குமாறு வீரர்களுக்கு உத்தரவிடப்பட்டது. அதுகுறித்து அஹ்ன் க்வி-ரியோங் அவர்களுடன் சண்டையிடுவதைக் காண முடிந்தது. “எனது ஒரே எண்ணம் நான் அவர்களைத் தடுக்க வேண்டும் என்பதுதான்” என அங்கு நடந்த மோதலைப் பற்றி பின்னர் அவர் தெரிவித்தார்.



ஜூலை 29 அன்று பிரெஞ்சு பாலினேசியாவில் உள்ள டஹிடி தீவில் பிரேசிலியன் கேப்ரியல் மதீனா என்பவர் ஒரு பெரிய அலையில் சர்ஃபிங் செய்த பிறகு உயர எழும்பி வானத்தில் மிதப்பது போன்று செய்தார். அப்போது எடுக்கப்பட்ட படம் உடனடியாக வைரலானது. எதிர்பாராத விதமாக, மதீனாவின் புகைப்படம் பாரிஸ் 2024 ஒலிம்பிக் போட்டிகளில் சிறந்த ஒன்றாக மாறியது.



ஒக்டோபர் 30ஆம் திகதியன்று மழை காரணமாக வலென்சியா நகரம் கடுமையான வெள்ளத்தைச் சந்தித்தது. ஒரு பெண் தனது பால்கனியில் இருந்து கீழே தெரிந்த காட்சியைப் பார்த்தார். அங்கு வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கிடந்தன. தெருக்களில் காணப்படும் காளைகளின் நெரிசலைப் போன்று அக்காட்சி தோற்றமளித்தது.



அமெரிக்காவின் இண்டியானா மாகாணத்தில் உள்ள ப்ளூமிங்டனில் ஏப்ரல் 8ஆம் திகதி முழு சூரிய கிரகணத்தின் ஊடாக ஒரு விமானம் பறந்தது. விமானத்தின் வெளிப்புற அமைப்பு சூரியனின் (கொரோனா) பிரகாசமான வெளிப்புற விளிம்புக்கு இணையாக இருண்ட கோடுகளாக பதிவாகியுள்ளது.

நிச்சயமாக, ஒரு விமானம், சந்திரன், சூரியன் மற்றும் பூமிக்கு குறுக்காகச் செல்வது இது முதல் முறை அல்ல. ஆனாலும் அரிதான புகைப்படமாக இது பார்க்கப்படுகிறது.



1635ஆம் ஆண்டு ஜான் வான் பிஜ்லெர்ட்டின் ஓவியமான “தி ஃபீஸ்ட் ஆஃப் தி காட்ஸ்” (The Feast of the Gods) என்ற கிரேக்கக் கடவுளான டியோனிசஸை நினைவுபடுத்துவதற்காக ஒழுங்கமைக்கப்பட்ட பரிஸ் ஒலிம்பிக் போட்டிகளின் ஆரம்ப விழா நிகழ்வின் போது எடுக்கப்பட்ட புகைப்படமே இதுவாகும்.



சூடானிய இராணுவத்திற்கும் துணை இராணுவ படைகளுக்கும் இடையிலான போரில், அரை மில்லியனுக்கும் அதிகமான மக்கள் வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இது தெற்கு சூடானில் கடுமையான நெருக்கடியை உருவாக்கியது. இதன் காரணமாக பெப்ரவரியில் தெற்கு சூடானின் ரெங்க் பகுதியில் உள்ள போக்குவரத்து மையத்தில் நெரிசலான வரிசையில் சூடான் அகதிகள் உதவிக்காகக் காத்திருந்ததை வெளிப்படுத்தும் புகைப்படமே இதுவாகும்.

தொகுப்பு : கிருஷிகா பாலரூபன்

காட்டு யானைகளால் பயிர்கள், வீடுகளுக்கு பாரிய சேதம்

# மக்கள் ஒன்றிணைந்து பாரிய போராட்டம்

(எம்.ரீ.ஆரிப் )

அநுராதபுரம் ஒயாமடுவ பகுதியில் அமைந்துள்ள தேசத்திற்கு மகுடம் காணிக்கு காட்டு யானைகள் கூட்டமாக நுழைந்து விவசாயிகளின் பயிர்கள் மற்றும் வீடுகளுக்கும் பாரிய சேதம் ஏற்படுத்தியதாக தெரிவித்து அரசாங்கத்திற்கும் அதிகாரிகளுக்கும் எதிராக ஆயிரக்கணக்கான மக்கள் ஒன்றிணைந்து நேற்று (30) பாரிய போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுக் காலை ஆரம்பமான இந்த போராட்டத்தில் விவசாயிகள் பெண்கள் என பெரும்பாலானோர் கலந்து கொண்டனர்.

சில வீடுகளில் சுவரொட்டிகள் ஒட்டி மஹாவிலச்சிய மற்றும் தந்திரிமலை செல்லும் பிரதான வீதிகளை மறித்து காட்டு யானைகளினாலும் வனவிலங்குகளினாலும் சேதமாக்கப்பட்ட பயிர்களையும் கொண்டு வந்தும் போராட்டத்தில் ஈடுபட்டனர். குறித்த ஆர்ப்பாட்டத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட



மக்கள் கலந்து திரண்டிருந்தனர். இரண்டு மணி நேரத்திற்கும் மேலாக வீதிப்போக்குவரத்திற்கு தடைஏற்பட்டிருந்தது.அதனை தடுப்பதற்கு பொலிசார் முயற்சித்த போதும் பயனளிக்கவில்லை. தந்திரிமலை பிரதேசத்திற்கு பொறுப்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ரீ.பிரசன்ன குமார மற்றும் ஒயாமடுவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எச்.எம்.யூ.சி. ரத்நாயக்க உள்ளிட்ட குழுவினர் போராட்டத்தை சமநிலைப்படுத்தினர்.

# வெலிகமவை சுற்றுலா நகரமாக மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்



(வெலிகம நிருபர்)

வெலிகமவை சுற்றுலா நகரமாக மாற்றியமைத்து நிலையான அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அர்கம் இல்யாஸ் தெரிவித்தார்.

வெலிகம பிராந்திய ஒழுங்கிணைப்புக் குழு கூட்டம் அண்மையில் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அர்கம் இல்யாஸ் தலைமையில் வெலிகம பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது. வெலிகம பிரதேச செயலாளர் பங்கேற்புடன் இடம் பெற்ற இக் கூட்டத்தில் பல முக்கியமான விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

வெலிகம ”சிபட்கோ” எரி பொருள் நிரப்பும் நிலையம் ஜனவரி முதலாம் திகதி முதல் 24மணி நேரமும் திறப்பதற்கான நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது. சுற்றுலாப் பயணிகளின் நலன்கருதி இந் நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் வெலிகம புகையிரத நிலையத்தினூடாக இணைவழி (online) மூலமாக பயணச்சீட்டு முன் பதிவு மற்றும் வழமையான பயணச்சீட்டுகள் வழங்கப்படவுள்ளன.

கடலோர சுற்றுலா வலயத்தில் உட் கட்டமைப்பு, மேம்பாடு மற்றும் விளக்குகள் பொருத்தி அலங்கரிக்கப்படவுள்ளன.

மேலும் வெலிகமையை சுற்றுலா நகரமாக மாற்றியமைத்து நிலையான அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளல். தெனிப்பிட்டிய, பொல்வது மோதர வீதியை புனர்நிர்மாணம் செய்தல் , கழிவு அகற்றல் மற்றும் மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள், அரச நிறுவனங்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் போன்றன விரிவாக ஆராயப்பட்டு அதற்கான தீர்வுகள் குறித்தும் முடிவுகள் எட்டப்பட்டுள்ளன.

# ஜனாதிபதி உறுதியளித்த உர மானியம் கிடைக்கவில்லை

## விவசாயி போராட்டம்



(எம்.ரீ.ஆரிப்)

அரசாங்கம் உறுதியளித்த உர மானியத்தை கோரி மஹாவிலச்சிய பகுதியைச் சேர்ந்த விவசாயி ஒருவர் பேமடுவ சந்தியில் அமைந்துள்ள பஸ் தரிப்பிடத்தின் கூரையில் ஏறி நேற்று (30) போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

விவசாய கூட்டத்தின் தீர்மானங்களுக்கேற்ப இப்பகுதி விவசாயிகள் பயிர்ச் செய்கையை ஆரம்பித்துள்ளோம். ஜனாதிபதி உறுதியளித்த உர மானியம் இப்பகுதி விவசாயிகளுக்கு உரிய முறையில் கிடைக்கவில்லை என அவர் தெரிவித்தார்.

இந்த உர மானியம் தொடர்பில் உரிய தீர்வு கிடைக்கும் வரைக்கும் போராட்டத்தை கைவிடப்போவதில்லை எனவும் விவசாயி மேலும் தெரிவித்தார்.

# சமூக ஊடகங்களில் வெளியான செய்திகள் ஜனாதிபதி செயலகத்தில் முறைப்பாடு

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதலின் பின்னர் பிரபலமாகிய நாமல் குமார, கொழும்பு பேராயர் கர்தினால் ரஞ்சித் குறித்து சமூக ஊடகங்களில் வெளியான செய்திகள் தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து மீண்டும் சர்ச்சைக்குள்ளாகியுள்ளார்.

தேசிய கத்தோலிக்க தொடர்பாடல் பணிப்பாளர் அருட்தந்தை ஜூட் கிரிசாந்த சமூக ஊடகங்களில் வெளியான தகவல் தொடர்பில் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவில் (சிஐடி) முறைப்பாடு செய்துள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது, அருட்தந்தை ஜூட் கிரிசாந்தவை தொடர்பு கொண்டு வினவிய போது, கர்தினாலிடம் CID வாக்குமூலம் பதிவு செய்ததாக அவர் உறுதிப்படுத்தினார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் வசம் உள்ள ஒரு ஒலிப்பதிவு கார்தினல் ரஞ்சித்தின் நடத்தை குறித்து விமர்சிப்பதாக நாமல் குமார கடந்த வாரம் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தில் முறைப்பாடு செய்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். “எனது இச் செயற்பாடு கர்தினாலைப் பாதுகாப்பதே தவிர, அவர் மீது சேறு பூசுவது அல்ல,” என்று அவர் மேலும் கூறினார்.

இதற்கிடையில், இது தொடர்பில் ராமநாயக்கவைத் தொடர்பு கொண்டபோது, கர்தினால் ரஞ்சித் பற்றிய ஒலிப்பதிவு கிளிப் எதுவும் தன்னிடம் இல்லை என்று கூறினார். “கர்தினால் ரஞ்சித்தின் நடத்தை பற்றிய ஒலிப்பதிவு கிளிப் எதுவும் என்னிடம் இல்லை. சில நபர்கள் செயற்கை நுண்ணறிவைப் (AI) பயன்படுத்தி நான் உட்பட என்மீதும் சிலர் மீது சேறு பூசுவதற்கு அவ்வாறு போலியான ஒன்றை உருவாக்கி இருக்கலாம்,” என்று அவர் கூறினார்.

”நான் நாமல் குமாரவை ஒருபோதும் சந்தித்ததில்லை, யாருக்கும் ஒலிப்பதிவு கிளிப்களை வழங்கவில்லை, சமூக ஊடகங்களில் எந்த கிளிப்களையும் வெளியிடவில்லை,” என்று அவர் மேலும் கூறினார்.

கர்தினாலை அவமதிக்கும் வகையிலான எந்த ஒலிப்பதிவுகள் தம்மிடம் இருந்தாலும் அவற்றை ஒப்படைக்குமாறு சில யூடியூப் சனல்கள் மற்றும் சில தொலைக்காட்சி சனல்களுக்கு கொழும்பு நீதவான் நீதிமன்ற இலக்கம் 8 தரங்க மல்வத்த உத்தரவிட்டுள்ளார்.

கர்தினால் மற்றும் தேவாலயத்தை அவமதித்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டின் பேரில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று அருட்தந்தை ஜூட் நீதிமன்றங்களில் மனு தாக்கல் செய்தமையும் குறிப்பிடத்தக்கது.

# எல்பிட்டிய பிரதேச சபையின் முதலாவது பட்ஜட் நிறைவேற்றம்

எல்பிட்டிய பிரதேச சபையின் 2025ஆம் ஆண்டுக்கான முதலாவது வரவு-செலவுத் திட்டம் எவ்வித விவாதமும் இன்றி ஏகமனதாக, நேற்று திங்கட்கிழமை (30) நிறைவேற்றப்பட்டது. தேசிய மக்கள் சக்தியின் தவிசாளர் சனத் சுமனசிறியினால் சமர்ப்பிக்கப்பட்ட இந்த வரவு- செலவுத் திட்டம் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர் நளீன் பிரியதர்ஷனவின் முன்மொழிவுடன் பொதுஜன ஐக்கிய சுதந்திரக் கூட்டமைப்பின் உறுப்பினர் சரத் அல்விஸின் வழிமொழிவுடன் நிறைவேற்றப்பட்டமை விசேட அம்சமாகும். தேசிய மக்கள் சக்தியின் தவிசாளர் உட்பட 15 உறுப்பினர்கள், பிற கட்சிகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 11 உறுப்பினர்கள் அடங்களாக, 26 உறுப்பினர்கள் இந்த விசேட கூட்டத்தில் பங்கேற்றனர்.

# எம்பியின் அலுவலகத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டம்

திறப்பனை பிரதேச செயலகப் பகுதிக்குட்பட்ட பல கிராமங்களுக்கு ”அப்போ ” என்றழைக்கப்படும் காட்டு யானையினால் ஏற்பட்டுள்ள பல்வேறு சேதங்களுக்கு தீர்வு பெற்றுத் தருமாறு கோரி திறப்பனை நகரில் அமைந்துள்ள தேசிய மக்கள் சக்தி அநுராதபுரம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பாக்ய சீ ஹேரத்தின் அலுவலகத்திற்கு முன்னால் நேற்று(30) பிரதேசவாசிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



(படங்கள் : எம்.ரீ.ஆரிப்)

# காட்டு யானை ரயிலில் மோதி உயிரிழப்பு

(எம்.ரீ.ஆரிப்)

கொழும்பில் இருந்து மட்டக்களப்பு நோக்கி பயணித்த புலதிசி கடுகதி ரயிலில் காட்டு யானை ஒன்று மோதி (29) உயிரிழந்துள்ளதாக மின்னேரிய வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

உயிரிழந்த யானை மின்னேரிய மற்றும் கவுடுள்ள தேசிய பூங்காவில் சுற்றித்திரிந்த 5 வயதுடைய பெண் யானை என்றும்.மின்னேரிய பூங்காவில் இருந்து கவுடுள்ள பூங்காவிற்கு ரயில் பாதையை கடக்கும் போது இந்த காட்டு யானை ரயிலில் மோதி உயிரிழந்திருக்கலாம் என வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மின்னேரிய வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

# அல்-பாஸியத்துல் நஸ்ரியாவில் 2ஆம் திகதி கட்டிட திறப்பு விழா

(பீ.எம் முக்தார்)



பேருவளை மருதானை அல்-பாஸியத்துல் நஸ்ரியா ஆண்கள் பாடசாலையில் மர்ஹூம் நாஸிம் பாச்சா மரிக்கார், மர்ஹூமா ஸித்தி ஹதீஜா ஆகியோரின் ஞாபகார்த்தமாக இவர்களது பிள்ளைகளினால் பல கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய வகுப்பறை கட்டிட திறப்பு விழா எதிர்வரும் 2ஆம் திகதி வியாழக்கிழமை நடை பெறும். அதிபர் திருமதி யெஹியா தலைமையில் நடைபெறவுள்ளது.

திறப்பு விழாவில் மர்ஹூம் நாஸிம் பாச்சா மரிக்கார் தம்பதிகளின் பிள்ளைகள் கலந்து கொண்டு புதிய கட்டிடத்தை திறந்து வைக்கவுள்ளனர். நான்கு மாடிகளைக் கொண்ட இக் கட்டிடத்தில் இரு மாடிகள் பூர்த்தி செய்யப்பட்டு முதல் கட்டமாக திறந்து வைக்கப்படுகிறது. மேற்படி, பாடசாலையில் நிலவும் இடப் பற்றாக்குறைக்கு ஓரளவு தீர்வு பெற்றுக் கொடுக்கும் வகையில் இவர்களது பிள்ளைகளினால் பாடசாலைக்கு அருகே காணியொன்று கொள்வனவு செய்யப்பட்டு நான்கு மாடிகளைக் கொண்ட கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு வருவதுடன் இரு மாடிகளின் நிர்மாண வேலைகள் தற்போது பூர்த்தியாகியுள்ளன.

# நிர்மாணப் பணிகளை பார்வையிட்ட ரிஷாட் எம்.பி

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனின் முயற்சியில் புத்தளம், நாகவில்லு பிரதேசத்தின், எருக்கலம்பிட்டி முஸ்லிம் மஹா வித்தியாலத்தில், சுமார் 07 கோடி ரூபா நிதியொதுக்கீட்டில் அமைக்கப்பட்டு வரும், 3 மாடிக்கட்டிடத்தின் நிர்மாணப்பணிகளை தலைவர் ரிஷாட் நேரில் சென்று பார்வையிட்டார். மேற்படி விஜயத்தின் போது, வகுப்பறைக் கட்டிட வேலைகளை துரிதப்படுத்துவதற்கு தேவையான ஆலோசனைகளையும் வழங்கிய அவர், தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியின் கீழ், பாடசாலைக்குத் தேவையான இலத்திரனியல் உபகரணங்களையும் கல்லூரி நிர்வாகத்தினரிடம் கையளித்தார்.



இந்நிகழ்வின் போது, மக்கள் காங்கிரஸின் புத்தளம் மாவட்ட அமைப்பாளரும் மாகாண முன்னாள் உறுப்பினருமான என்.ரீ.எம். தாஹிர், பிரதேச சபை முன்னாள் உறுப்பினர்களான றிபாஸ், ரிஜாஜ் மற்றும் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு உறுப்பினர் நாசர், பாடசாலையின் அதிபர், பிரதி அதிபர், பாடசாலையின் அபிவிருத்தி குழு உறுப்பினர்கள் உட்பட கட்சியின் நாகாவில்லு கிளை முக்கியஸ்தர்களும் கலந்துகொண்டனர்.

# மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி குழு இறுதிகூட்டம்



▮ வெல்லாவெளி நிருபர்

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி குழு இவ்வாண்டுக்கான இறுதிகூட்டம் நேற்று திங்கட்கிழமை (30) அரசாங்க அதிபர் திருமதி ஜே.ஜே. முரளிதரனின் ஒழுங்கமைப்பில் பழைய மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

புதிய அரசாங்கத்தின் முதலாவது மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டமானது அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவர்களான பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் தலைமையில் நடைபெற்றது.

மாவட்டத்தின் அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்ட விவசாய நஷ்ட ஈடு சம்பந்தமாகவும் பசளை வழங்குதல் டெங்கு கட்டுப்பாடு சுகாதாரம் கல்வி மீன்பிடி போக்குவரத்து எதிர்காலத்தில் வெள்ள பாதிப்புகளை தடுத்தல் சம்பந்தமாகவும் இங்கு விரிவாக ஆராயப்பட்டன.

இந்த கூட்டத்தின் போது மாவட்டத்தின் மக்கள் பிரதிநிதிகள் அரச திணைக்களங்களின் உயர் அதிகாரிகள் பிரதேச செயலாளர்கள் மாவட்ட செயலக உயர் அதிகாரிகள் விவசாய பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

## கிராம உத்தியோகத்தர் மீது தாக்குதல்:

# கைது செய்யுமாறு கண்டன போராட்டம்

▮ எச்.எம்.எம்.பர்ஸான்

மட்டக்களப்பு மாவட்ட கிராம உத்தியோகத்தர்கள், மட்டக்களப்பு காந்தி பூங்கா சதுக்கத்தில் நேற்று (30) போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

சில நாட்களுக்கு முன்னர் கோறைப்பற்று வாழைச்சேனை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட நாசிவன்தீவு பகுதி கிராம உத்தியோகத்தர் தாக்கப்பட்டதை கண்டித்தும், தாக்கியவர்களை கைது செய்யக் கோரியும் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று அண்மையில் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட தியாவட்டவான் கிராம



உத்தியோகத்தர் ஒருவரும் தாக்கப்பட்டதாக வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கிராம உத்தியோகத்தர்கள் தங்களது கடமைகளை அச்சுறுத்தலின்றி மேற்கொள்ள வேண்டியும், தாக்கியவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கக் கோரியும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

# பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் கல்முனை கிளையின் வருடாந்த ஒன்றுகூடல்



▮ நியாஸ் ஆதம்

இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் கல்முனை கிளையின் வருடாந்த ஒன்றுகூடலும் பொதுச் சுகாதார பரிசோதகர்களாக பணியாற்றி ஓய்வு பெற்றுச் சென்றவர்களை பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வும் அக்கரைப்பற்று மெங்கோ கார்டனில் இடம்பெற்றது.

சங்கத்தின் தலைவரும் மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகருமான ஜே.எம்.நிஸ்தார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சஹிலா இஸ்ஸடீன் பிரதம அதிதியாகவும், பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.சீ.எம்.மாஹிர் கௌரவ அதிதியாகவும் கலந்து சிறப்பித்தார்.

இதன்போது இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் கல்முனை கிளையின் மேலங்கி (T-Shirt) அறிமுகம் செய்து வைக்கப்பட்டதுடன் மிக நீண்டகாலமாக பொதுச் சுகாதார பரிசோதகர்களாக பணியாற்றி அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்று செல்லும் ஐ.எல்.றாசிக், அப்பாஸ் எம்.நியாஸ், சீ.பி.எம்.ஹனீபா ஆகியோர் அதிதிகளினால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

பல்வேறு அர்ப்பணிப்புகளுக்கு மத்தியில் சுகாதாரத்துறைக்கு பொதுச் சுகாதார பரிசோதகர்கள் ஆற்றிவரும் அளப்பெரும் சேவை குறித்து பாராட்டி பேசிய பிராந்திய பணிப்பாளர், சகல பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கும் அவர்களது அலுவலக பணிகளை சிறப்பாக முன்னெடுப்பதற்காக முககவசமுடைய டியப ஒன்றினையும் இந்நிகழ்வின் போது வழங்கி வைத்தார்.

## பல்கலை தெரிவான 200 மாணவர்களுக்கு மூதூரில் பாராட்டு

▮ மூதூர் நிருபர்

மூதூர் பிரதேசத்திலிருந்து இம்முறை பல்கலைக்கழகம் தெரிவு செய்யப்பட்ட மூவினங்களையும் சேர்ந்த 200 மாணவர்கள் பாராட்டி நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு மூதூர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

மூதூர் அனர்த்த சமூக சேவைகள் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவரும் மூதூர் திடீர் மரண விசாரணை அதிகாரியுமான யூசுப் லாபிர் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது மாணவர்கள் பேண்ட் வாத்தியங்களோடு மூதூர் பிரதான வீதியூடாக பேரணியாக விழா மண்டத்திற்கு அழைத்துவரப்பட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன.

# சீன அரசினால் உலர் உணவு பொதிகள் வழங்கி வைப்பு



▮ ஏ.எச் ஹஸ்பர்

சீன அரசாங்கத்தினால் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சியின் தலைமையில் சீன தூதுவர் H.E.Qi Zhenhong ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவுப் பொதிகள் மாவட்ட செயலகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டன.

திருகோணமலை மாவட்டத்தில் 700 பேருக்கு தலா 6500 ரூபா பெறுமதியான பொதிகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. அந்த வகையில் மாவட்ட செயலகத்தில் வைத்து 200 பேருக்கு குறித்த பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள் ளதுடன் ஏனையவர்களுக்கு பிரதேச செயலகங்களின் ஊடாக வழங்குவதற்கும் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது பயன்பெற்ற பய னாளிகள் இலங்கை அரசாங்கத் திற்கும் சீன நாட்டுக்கும் தமது நன்றிகளை தெரிவித்துக் கொண் டனர்.

இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.சுதாகரன், ஆளுநரின் செயலாளர் ஜே.எஸ். அருள்ராஜ், ஆளுநரின் பிரத்தியேக செயலாளர் வெ.இராஜசேகர், அனர்த்த முகாமைத்துவ பிரதிப் பணிப்பாளர் கு.சுகுணதாஸ், பிரதேச செயலாளர்கள், அரச அதிகாரிகள், சீனத்தூதுவர் H.E.Qi Zhenhong குழுவினர் மற்றும் பயனா ளிகளும் கலந்துகொண்டனர்.

# நோய்வாய்ப்பட்ட நிலையில் தவிக்கும் யானைக்குட்டி



▮ ஆரையம்பதி நிருபர்

மட்டக்களப்பு காவத்தமுனை வாகனேரி வயல்வெளி பிரதேசத்தில் நோய்வாய்ப்பட்ட நிலையில் 6 வயது மதிக்கத்தக்க காட்டு யானைக் குட்டி (29) ஞாயிற்றுக்கிழமை நோய் வாய்ப்பட்ட நிலையில் விழுந்து கிடந்துள்ளது.

நடக்க முடியாத நிலையில் காணப்படும் யானைக் குட்டி தொடர்பாக உள்ளூர் விவசாயிகளினால் கிரான் பிரதேச வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதனை தொடர்ந்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த உரிய அதிகாரிகள் சிகிச்சை அளிப்பதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்திருந்தனர்.

கடந்த வாரம் முதல் வயல் பிரதேசத்தில் தனிமையில் அலைந்து திரிந்த இந்த காட்டு யானையானது உடல் மெலிந்து உணவு உட்கொள்ள முடியாத நிலையில் பலவீனமுற்ற நிலையில் காணப்பட்டதாக அப்பகுதி விவசாயிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, காவத்தமுனை மஜ்மா நகர் மற்றும் நாவலடி ஆகிய பிரதேசங்களில் காட்டு யானைகளின் அட்டகாசம் தொடர்சியாக அதிகரித்துள்ளது. இதிலிருந்து தங்களை பாதுகாப்பதற்கு யானை வேலிகளை அமைத்து தருமாறு அப்பிரதேச மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதனை கவனம் எடுக்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

## குருக்கள்மடம் ஐயப்பன் சந்நிதானத்தில்

# மகரஜோதி பெருவிழா

▮ வெல்லாவெளி நிருபர்

மட்டக்களப்பு மாவட்டம் குருக்கள்மடம் கிராமத்தில் அமைந்துள்ள ஐயப்பன் சந்நிதானத்தில் மகரஜோதி பெருவிழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது.



அதிகாலை 5.45 மணிக்கு விசேட மகரஜோதி கிரியை வழிபாடுகளுடன் ஆரம்பமாகி, ஐயப்பனுக்கு விசேட அபிசேகம் இடம்பெற்று, பக்தி பூர்வமான பஜனை நிகழ்வு நடைபெற்றது. பின்னர் 18 படிப்பூசை நடைபெற்றது.

குருக்கள்மடம் செல்லக் கதிர்காம சுவாமி ஆலயத்திலிருந்து ஐயப்பன் சந்நிதானம் வரையில் நடைபவனியாக ஆபரணம் எடுத்து வரும் நிகழ்வு இடம்பெற்றது. தொடர்ந்து வன்புலி வாகனத்தில், எழுந்தருளிய ஐயப்பனுக்கு பக்தி பூர்வமான மகரஜோதி பெருவிழா நடை பெற்றது.

ஐயப்பனின் கிரியை பூஜை நிகழ்வுகள் யாவும் தர்மசாஸ்தா புனித மாலை குழு குருசாமி ஜெசிந்திரா குரு தலைமையில், விஸ்வ பிரம்மஸ்ரீ செ.சுபேஸ்வரன் குருசுவாமி ஐயா, ஆலய பிரதம செ.சிவகரன் குழுவின ரால் பக்தி பூர்வமாக இடம் பெற்றது. இதன்போது பல ஐயப்ப பக்தர்கள் கலந்து கொண்டு வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

# அநாதரவான சிறுவர்களின் கல்வி நிலையத்திற்கு மூன்று மாடிக் கட்டிடம்

▮ சுலைமான் றாபி

நிந்தவூரில் தந்தையர்களை இழந்த அனாதைச் சிறுவர்களின் கல்வியூட்டல் நடவடிக்கைகளுக் காக, நிந்தவூர் விஸ்டம் கொலிஜ் எனும் பெயரிலான கல்வி நிலையமானது, மனிதாபிமான பணிகளுக்கான மையம் (சீ.எச்.ஏ) அமைப்பினருடன் இணைந்து, நிந்தவூர் பிரதேசத்தில் அனாதைச் சிறுவர்களின் கல்வி நிலையத்திற்கான மூன்று மாடிக் கட்டிடம் ஒன்றினை அமைப்பதற்காக அடிக்கல் நடும் நிகழ்வானது, கடந்த வாரம் நிந்தவூரில் இடம்பெற்றது.

நிந்தவூர் மனிதாபிமான பணிகளுக்கான மையத்தின் அமைப்பின் கீழ், விஸ்டம் கொலிஜின் தலைவரும், சட்டத்தர ணியுமான எம். ஐ. உமர் அலியின் தலைமையில் இந்நிகழ்வுகள் நடை பெற்றன.

அவுஸ்திரேலியாவில் இருந்து இயங்குகின்ற ஓப்பன் பீட்(Open Feed) என்னும் சமூகசேவை நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியான காத்தான்குடியைச் சேர்ந்த கலாநிதி அலவி ஷரீப்தீன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு அனாதைச் சிறுவர்களின் கல்வி மேம்பாட்டிற்கான மூன்று மாடிக கைக்கொண்ட கட்டடித்திற்கான அடிக்கல்லை நட்டுவைத்தார்.

# கலை இலக்கிய ஒன்று கூடலும் நினைவுப் பேருரையும்



▮ எம்.என்.எம்.புஹாரி

மூதூர் -சேனையூர் அனாமிகா பண்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் அனாமிகா நினைவுப் பேருரையும், கலை இலக்கிய ஒன்று கூடலும் விருது வழங்கல் நிகழ்வும் மூதூர் சேனையூர் அனாமிகா பண்பாட்டு மையத்தில் நடைபெற்றது.

இதன்போது கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.அத்தோடு பல்துறை கலைஞர்கள் 8 பேர் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.இதன்போது தோப்பூரைச் சேர்ந்த சுயாதீன ஊடகவியலாளர் எம்.என்.எம்.புஹாரி ஊடகத் துறைக்கான இளம் கலைஞர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். அத்தோடு பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா நினைவுச் சின்னமும் பொன்னாடையும் போர்த்தி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா கலந்து சிறப்பித்தார்.ஏனைய அதிதியாக தமிழ்நாட்டு பேராசிரியர் கி.பார்த்திபராஜா கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

# நெல்லுக்கும் கட்டுப்பாட்டு விலை வேண்டும்

## கல்முனை அரிசி உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்



சுலைமான் றாபி

அரிசிக்குக் கட்டுப்பாட்டு விலை இருப்பது போன்று, நெல்லுக்கும் கட்டுப்பாட்டு விலை இருக்க வேண்டும் என மட்டுப்படுத்தப்பட்ட கல்முனை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பிரிவு, அரிசி உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் தெரிவித்துள்ளது.

ஞாயிற்றுக்கிழமை, நிந்தவூரில் நடைபெற்ற, நிகழ்வின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

இதன் போது கருத்து தெரிவித்த சங்கத்தின் தலைவர் ஏ.எல். பதுர்டீன்,

அரிசிக்குக் கட்டுப்பாட்டு விலை இருப்பதைப் போன்று நெல்லுக்குக் கட்டுப்பாட்டு விலை நிர்ணயிப்பதில்லை. தற்போது நெல்லை அதிக விலைக்குக் கொள்வனவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் அரிசி உற்பத்தியாளர்களாகிய நாங்கள் அதிகம் பாதிக்கப்படுகின்றோம். அதிக விலைக்கு நெல்லை வெளி மாவட்டங்களிலிருந்து வருகின்றவர்கள் கொள்வனவு செய்கின்றார்கள். அரசாங்கம் அவர்களுக்குக் கடன் வசதிகளைச் செய்து கொடுத்துள்ளது. ஆனால் அம்பாறை மாவட்ட மக்களாகிய தங்களுக்கு மிகப்பெரும் அநீதி இழைக்கப்படுகிறது. இலங்கை அரிசித் தேவையை அதிகம் பூர்த்தி செய்கின்ற தங்களுக்கு அரசாங்கம் எந்தவொரு கடன் வசதிகளையும் செய்து தருவதில்லை என்று தெரிவித்தார்.



சப்ரகமுவ மாகாண புதிய பிரதம செயலாளராக ஈ.கே.ஏ.சுனிதா நியமிக்கப்பட்டுள்ளார். இவர் நேற்று (30) சப்ரகமுவ சபையில் தமது கடமைகளை பொறுப்பேற்று கொண்டார். **படம் : இரத்தினபுரி நிருபர்**

# யாழில் வாழும் உறவுகள் போராட்டம்




பு.கஜிந்தன்

இலங்கையில் உள்நாட்டு யுத்தம் நடைபெற்ற காலப்பகுதியில் வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் வாழும் உறவுகள் நேற்று திங்கட்கிழமை (30) தமது காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி வேண்டி போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

இவ்வாறான போராட்டங்கள் வடக்கு மாகாணத்தின் மாவட்டங்கள் தோறும் மாதாந்தம் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் இந்த போராட்டமும் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் முனியப்பர் ஆலய முன்றலில் ஆரம்பிக்கப்பட்ட குறித்த போராட்டமானது ஊர்வலமாக யாழ். பிரதான வீதி மற்றும் காங்கேசன் துறை வீதியூடாக சென்று யாழ். மத்திய பஸ் நிலையத்தை அடைந்தது. யாழ் மத்திய பஸ் நிலையத்தில் ஒன்று கூடிய வாழும் உறவுகள் தமது வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் நிலைகுறித்து சர்வதேசமே தீர்வை வழங்கவேண்டும் போன்ற சுலோகங்களை ஏந்தியவாறு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

# சுகாதார ரீதியான சவால்கள்; கலந்துரையாடல்



பு.கஜிந்தன்

உடற்கல்வி டிப்ளோமா ஆசிரிய சங்கத்தின் தலைவருக்கும் யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் ஆகியோருக்கிடையில் நேற்று கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

இந்த கலந்துரையாடலில் பாடசாலை மாணவர்கள் எதிர்நோக்கும் சுகாதார ரீதியான சவால்களை நிவர்த்தி செய்ய வேண்டுகோள் விடப்பட்டது. பாடசாலையின் சிற்றுாண்டிசாலையின் தரத்தை உயர்த்துதல், துரித உணகளையும் எண்ணெய் உணவுகளையும் பொதி செய்த உணவுகளையும் தடைசெய்தல். கழிப்பறை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துத் தூய்மைப் படுத்தல், தூயநீரினை உறுதிப்படுத்தல், பெண்பிள்ளைகள் மத்தியில் அதிகரித்துள்ள இமோகுளோபின் குறைபாடு, கட்டிளமைப்பருவ உணவுப்பழக்கம் என்பன பற்றித் தெளிவாகப் பேசப்பட்டன.

அதற்கான நடவடிக்கை 2025ஆம் ஆண்டு தீவிரமாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் உறுதியாகத் தெரிவித்தார்.

# மஹிந்தவின் ஊடகப் பேச்சாளர் நியமனம்



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ ஊடகப் பேச்சாளராக சட்டத்தரணி ரவீந்திர மனோஜ் கமகே நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நியமனக் கடிதம் நேற்று (30) விஜயராமவிலுள்ள மஹிந்த ராஜபக்ஷவின் உத்தியோக பூர்வ இல்லத்தில் சட்டத்தரணி ரவீந்திர மனோஜ் கமகேவிம் மஹிந்த ராஜ பக்ஷவினால் வழங்கி வைக்கப்பட்டது.

# கென் சர்வதேச பாடசாலையின் பரிசளிப்பு விழா

பீ.எம் முக்தார்

பேருவளை சீனன்கோட்டை கென் சர்வதேச ஆரம்ப பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா பேருவளை சீக்கு விழா ஹோட்டலில் நடைபெற்றது.

பாடசாலை பணிப்பாளர் அஷ்ஷெய்ஹ். முஹம்மத் இஹ்ஸான் (நளீமி) தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் சிறார்களின் கலை, கலாசார நிகழ்ச்சிகளும் மேடையேற்றப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. பாடசாலையின் மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், ஊர் பிரமுகர்கள் என பலரும் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

# துப்பாக்கியை விட்டுச் சென்ற கான்ஸ்டபிள் பணி இடைநிறுத்தம்

அக்கராயன்குளம் மகா வித்தியாலயத்தில் உயர்தரப் பரீட்சைக்கான கடமையில் இருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் தான் கடமையாற்றிய இடத்திலேயே 120 தோட்டாக்கள் கொண்ட T56 துப்பாக்கி மற்றும் 4 மெகசின்களை வைத்து விட்டு வீட்டுக்குச் சென்ற குற்றச்சாட்டில் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டதாக கிளிநொச்சி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

அக்கராயன்குளம் பொலிஸில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

இந்த கான்ஸ்டபிள் எந்தவொரு உயர் அதிகாரிக்கும் அறிவிக்காமல் கடமை நிலையத்தில் இருந்து சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அவரின் ஒழுக்கமற்ற செயல் காரணமாகவே கான்ஸ்டபிள் பணி இடைநிறுத்தப்பட்டதாக கிளிநொச்சி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம் தெரிவிக்கின்றது.



உடப்பு வம்பிவட்டான் புளியடி மரத்தடியில் அமைந்துள்ள ஸ்ரீஐயப்ப சுவாமி ஆலயத்தின் வருடாந்த சபரிமலை யாத்திரியை முன்னிட்டு ஞாயிற்றுக்கிழமை(29)இரவு கருப்பன் பூஜை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கருப்பன் வேடமணிந்து ஐயப்பன் பக்தர்கள் பக்தி பரவசத்தில் ஆடி மகிழ்ந்தனர். **படங்கள்: மகாதேவன்**

# அ. இ.ஜம்மியத்துல் உலமா சபையினால் நிதியுதவி



கே.எ.ஹமீட்

சீரற்ற காலநிலையால் தொழில்கள் மற்றும் சொத்துக்கள் பாதிக்கப்பட்ட செங்கற்சூளை உரிமையாளர் 190 பேர் மற்றும் மாட்டுவண்டி உரிமையாளர் 62 பேருக்கு நேற்று (30) சம்மாந்துறை அன்வர் இஸ்மாயில் பள்ளி வாசலில் வைத்து அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபையினால் நிதியுதவி வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில், அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபையின் உறுப்பினர்கள், கொழும்பு கிருலாப்பனை பள்ளிவாசல் சம்மேளன நிர்வாக செயலாளர் என பலரும் கலந்து கொண்டனர்.

# உதுமான் முன்பள்ளியின் மாணவர் விழா



எச்.எம்.எம்.பர்ஸான்

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபையின் நிர்வாகப் பிரிவின் கீழ் இயங்கி வரும் மீராவோடை உதுமான் பாலர் பாடசாலையின் 32 ஆவது மாணவர் வெளியேற்று விழா ஞாயிற்றுக்கிழமை (29) நடைபெற்றது.

# பள்ளத்தில் பாய்ந்த ஜீப் வண்டி ; ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் காயம்



நல்லத்தண்ணி – மஸ்கெலியா பிரதான வீதி பிரவுன் தோட்ட பகுதியில் ஜீப் வண்டி ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர் காயமைடைந்துள்ளனர்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பயணித்த, ஜீப் வண்டியில் கொடகவெல, பலாங்கொட, ராகலை ஆகிய பிரதேசங்களை சேர்ந்த நான்கு பெண்கள் மற்றும் ஒரு ஆண் காயமடைந்து மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், டிக்ஓயா ஆரம்ப வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக மஸ்கெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

ஞாயிற்றுக்கிழமை (29) சிவனொளி பாதமலைக்கு யாத்திரை சென்று நேற்று (30) வீடு திரும்பி கொண்டிருந்த போதே நல்லத்தண்ணி – மஸ்கெலியா பிரதான வீதி பிரவுன் தோட்ட பகுதியில் விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது ஜீப் வண்டியில் ஏழு பேர் பயணித்ததுள்ளதாகவும் அதில் இருந்த குழந்தையொன்று மற்றும் சாரதி சிறு காயங்களுக்குள்ளாகியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஜீப் சாரதிக்கு ஏற்பட்ட தூக்கமே விபத்திற்கான காரணம் என தெரியவந்துள்ளது. மேலும் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மஸ்கெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கசிப்பு விற்ற இருவர் மீதும்பிட்டியவில் கைது

ராமு தனராஜா

கசிப்பு விற்பனை மற்றும் உற்பத்தியில் ஈடுப்பட்ட இருவரை மீதும்பிட்டி பகுதியில் வைத்து கைது செய்துள்ளதாக பசறை பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களிடம் இருந்து 157500 மில்லி லீற்றர் கோடாவும் 2250 மில்லி லீற்றர் கசிப்பும் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் மீதும்பிட்டிய பகுதியை சேர்ந்த 36, மற்றும் 56 வயதுடைய இருவரை கைது செய்துள்ளதாகவும் பசறை பொலிஸார் தெரிவித்தனர்.

பசறை மீதும்பிட்டி பகுதியில் குறித்த சந்தேக நபர்கள் கசிப்பு விற்பனையிலும் உற்பத்தியிலும் ஈடுபட்டு வருவதாக பசறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஈ.எம். பியரட்ணவிற்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமைய பசறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் ஆலோசனையின் பேரில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது வீட்டினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த கசிப்பு கைப்பற்றப்பட்டதாகவும் வீட்டின் பின்புறத்தில் கசிப்பு உற்பத்திக்காக பரல் ஒன்றில் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த கோடாவும் பரலும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அத்தோடு சந்தேக நபர்களுக்கு எதிராக பசறை நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளதாகவும் மேலதிக விசாரணை களை பசறை பொலிஸார் மேற் கொண்டு வருவதாகவும் பசறை பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இருப்பினும் குறித்த பகுதிகளில் பாரிய அளவில் கசிப்பு காணப்படுவதாகவும் விடுமுறை தினங்களில் மதுபானசாலைகள் மூடப்பட்டிருக்கும் வேளைகளில் வேறு பகுதிகளில் இருந்து கசிப்பு குடிப்பதற்காக அதிக அளவில் நபர்கள் வருகின்றார்கள் இதனால் அப்பகுதியில் உள்ள மக்கள் பாரிய அசௌகரியங்களுக்கு முகம் கொடுப்பதாகவும் பாடசாலை மாணவர்கள் படிப்பதற்கும் இடையூறு ஏற்படுவதாகவும் புதிய அரசாங்கம் இது சம்பந்தமாக கவனம் செலுத்தி கசிப்பை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.



# இலங்கை-இந்திய தீர்மானம் மட்டும் மீனவர் பிரச்சினையை தீர்ந்து விடாது

## சட்டத்துக்கு அப்பால் இது வாழ்வாதாரப் பிரச்சினை..!

## கச்சதீவு - முடிவாக்கப்பட்ட ஒரு விவகாரம்...

### தமிழ்நாட்டில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம்

திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது

இந்தியாவின் இராமநாதபுரம் விருந்தினர் இல்லத்தில் கடந்த சனிக்கிழமை (28) ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் செய்தியாளர்களுக்கு பேட்டி ஒன்றை வழங்கியிருந்தார்.

குறித்த பேட்டியில் இலங்கை இந்திய மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் தெரிவித்த கருத்துக்கள் பின்வருமாறு:

நான் எனது தனிப்பட்ட அலுவல் காரணமாகத்தான் இப்பொழுது இந்தியா வந்திருக்கிறேன். இருந்தபோதிலும் உங்களோடு சில கருத்துகளைப் பகிரும் இந்த நல்ல வாய்ப்பைப் பெற்றமைக்காக நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தியா –இலங்கை இடையிலான நட்புறவுக்கு மிகப்பெரும் பாலமாகத் திகழ்ந்தவரும், இந்திய பொருளாதாரத்தின் சிற்பியாகத் திகழ்ந்துவருமான – இந்திய முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் அவர்களது மறைவுக் செய்தி பேரதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. இந்திய அரசினருக்கும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியினருக்கும், கூட்டணிக் கட்சியினருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவர் இந்திய– இலங்கை நட்புறவுக்குப் பாலமானவர் மட்டுமல்ல,இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு மிகப்பெரிய தூணாகவும் திகழ்ந்தவர் என்ற அடிப்படையில், இந்த முழு பிராந்தியத்திலும் அவருக்கென தனிச்சிறப்பும், தனி முக்கியத்துவமும் இருக்கிறது என்பதை நாம் எல்லோரும் அறிவோம். அப்படிப்பட்ட பொருளாதார நிபுணரின் மறைவு நம் அனைவரையும் பாதித்திருக்கிறது என்றால் அது மிகையாகாது.

இலங்கையில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற இலங்கை ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க இந்தியாவுக்கு வருகை தந்திருந்தார்.அவரது இந்த விஜயம், இந்திய,இலங்கை நட்புறவு மென்மேலும் மேம்பட முக்கிய காரணமாக அமையும் என்று நம்புகிறேன்.

**கேள்வி: இந்திய இலங்கை மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காண இத்தனை ஆண்டுகள் ஆகின்றனவே? இன்னும் தீர்வு வரவில்லையே, ஏன்?**

**பதில்:** எனது அன்பு நண்பர் நவாஸ் கனி அவர்களும், சகோதரி கனிமொழி அவர்களும் அடிக்கடி என்னிடம் கொண்டு வருகிற துர்பாக்கியமான பிரச்சினை இது. இந்தியா, இலங்கை இரண்டு நாடுகள் மட்டும் தீர்மானித்துவிட்டால் இந்த பிரச்சினை தீர்ந்து விடாது. மாறாக, இது ஒரு சமூகப் பிரச்சினை. இருநாட்டு மீனவ மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினை. இதை உணர்ந்து கொண்டு, அதற்கு ஏற்ப சில விட்டுக்கொடுப்புகளை இரு தரப்பும் செய்து கொண்டால், நல்லதொரு சுமூகமான முடிவு கிட்டும். அப்படிக் கிடைக்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய விருப்பமும், அவாவுமாக இருக்கிறது.

தமிழ் பேசும் மக்கள் என்கிற அடிப்படையில், தமிழ்நாட்டு மக்களுக்கும் – இலங்கை வடக்குப் பகுதி வாழ் மீனவ மக்களுக்கும் இடையில் பாரம்பரியமான தொப்புள் கொடி உறவு இருக்கிறது. எனினும், இலங்கை கடற்படையினர் இப்படியான அத்துமீறல்களில் நடந்து கொள்கிறார்கள் என்று சொல்லாடல்கள் தமிழ்நாட்டில் அடிக்கடி நடப்பதும், அதுபோல தங்களுடைய மீன்வளங்களை இந்திய மீனவர்கள் அளவுக்கு மீறி அபகரித்துக் கொள்கிறார்கள் என இலங்கை மீனவர்களும் அடிக்கடி இந்த விவகாரத்தில் முன்னுக்குப் பின் முரணாக பல அம்சங்களைச் சொல்லித் திரிவது ஆரோக்கியமானதல்ல.

**கேள்வி: இலங்கை மற்றும் இந்திய மீனவர்கள் பிரச்சினை அடிக்கடி நடக்கிறது நிரந்தர தீர்வு என்ன...?**

**பதில்:** தமிழ்நாட்டு மீனவர்கள் இதை உணர்வுபூர்வமான அம்சமாகப் பார்க்கிற காரணத்தால், இலங்கை அரசுடன் இந்திய ஒன்றிய அரசு தொடர்பு சற்று நெகிழ்வுத் தன்மையுடன் நடந்து கொள்ளும். சட்டத்துக்கு அப்பால் இது வாழ்வாதாரப் பிரச்சினை. ஆழ்கடல் மீனவர்களுக்கு அவர்களுக்கான வசதிகளைச் செய்து கொடுப்பதற்கான ஏற்பாடுகள், பாக் நீரிணையில் இருக்கிற மீன் வளங்கள் அளவுக்கு அதிகமாகச் சூறையாடப்படுகின்றன என்பதுதான் இப்போதுள்ள பிரச்சினை. எனவே இதற்கான மாற்றுத் தீர்வுகளை விரைவாக வழங்கியாக வேண்டும்.

**கேள்வி: இலங்கையில் மாகாணசபைத் தேர்தல் வரும்பொழுது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுடன் இணைந்து பயணிப்பீர்களா அல்லது உங்கள் நிலைப்பாடு என்ன?**

**பதில்:** இதுகுறித்து கட்சி கூடித்தான் தீர்மானிக்க வேண்டும். மாகாண சபை தேர்தலுக்கு முன்பு உள்ளூராட்சி சபை தேர்தல் நடப்பதாகத்தான் இப்பொழுது சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அதன் அடிப்படையில் சில சட்டமூலங்கள் நாடாளுமன்றத்தில் அடுத்த அமர்வில் நிறைவேற்றப்படவிருக்கின்றன. மீனவர் பிரச்சினை குறித்து எழுந்தது போல, மாகாண சபை தேர்தல் குறித்தும் ஒரு சர்ச்சை எழுந்திருந்தது. இலங்கை ஜனாதிபதியின் இந்திய விஜயத்திற்குப் பிறகு மாகாண சபை தேர்தல் தொடர்பிலும் இந்திய அரசு கொஞ்சம் கரிசனை காட்டும் என்பதாகச் சொல்லப்படுகிறது.

**கேள்வி: உங்களுடன் பயணித்த மூத்த அரசியல் தலைவர் மனோ கணேசன் உள்ளிட்டவர்களையெல்லாம் நடைபெற்று முடிந்த இலங்கை நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் பெரிதும் புறக்கணித்திருக்கிறார்களே? இது குறித்து என்ன கருதுகிறீர்கள்?**

**பதில்:** இம்முறை நடைபெற்ற தேர்தல் என்பது ஒரு சுனாமி பேரலைப் போல. இம்முறை ஒரு மாறுபட்ட அரசியல் சூழல் உருவாகியிருந்தது. பல மூத்த தலைமைகள் தோல்வியைத் தழுவினாலும், நண்பர் மனோ கணேசன் அவர்களை நாடாளுமன்ற உறுப்பினராக எப்படியும் கொண்டுவர வேண்டும் என்பதற்காக தேசிய பட்டியல் ஊடாக அவருக்குப் நாடாளுமன்ற அந்தஸ்தை எங்களது கூட்டணி வழங்கியிருக்கிறது.

**கேள்வி: இலங்கை ஜனாதிபதி அண்மையில் இந்தியா வந்தார். அடுத்த மாதம் சீனா செல்வதாக செய்திகள் கூறுகின்றன. இலங்கை அரசு உண்மையில் யாருடன் உண்மையான நட்பு பாராட்டுகிறது?**

**பதில்:** இலங்கையைப் பொறுத்தமட்டில் எங்களது அரசின் வெளியுறவுக் கொள்கை சர்வதேச மட்டத்தில் எல்லா நாடுகளையும் ஒரே அளவில் கையாள வேண்டும் என்பதாகத்தான் இருக்கிறது. அது அப்படித்தான் இருக்க வேண்டும். அதிலும் இந்தப் பிராந்தியத்தில் இலங்கை ஒரு மிகச்சிறிய நாடு என்கிற அடிப்படையில், அண்டை நாடுகள் அனைத்தோடும் நல்ல உறவைப் பேண வேண்டும் என்று இலங்கை கருதுகிறது.

**கேள்வி: கச்சத்தீவு ஒப்பந்தம் விஷயமாக மீண்டும் இந்தியாவிடம் ஒப்படைக்க சாத்தியம் இருக்குமா...?**

**பதில்:** கச்சத்தீவு ஒப்பந்தம் என்பது இந்தியாவின் பெருந்தன்மை அடிப்படையில் செய்து தீர்வு காணப்பட்ட (இந்திய – இலங்கை நாடுகளுக்கு இடையிலான) ஒப்பந்தம். அது முடிவாக்கப்பட்ட ஒரு விவகாரம். அப்படியிருக்க, அதை மீளக் கிண்டிக் கிளறி, அதன் காரணமாக இந்திய – இலங்கை உறவில் விரும்பத்தகாத ஒரு மாற்றத்தை ஏற்படுத்த முயலாமல், இப்பொழுது இருக்கும் பிரச்சினைகளை நல்ல முறையில் தீர்க்க எல்லோரும் இணைந்து முயற்சிப்பதுதான் சாலச்சிறந்தது என்றார்.

---




# இந்திய தாய்க்கு ஆதரவு வழங்கிய எலான் மஸ்க்

இந்திய வம்சாவளியை சேர்ந்த ஓபன் ஏ.ஐ., இன்ஜினியர் மர்ம மரணம் குறித்து எப்.பி.ஐ., விசாரணை கோரும் அவரது தாயாருக்கு, முன்னணி தொழிலதிபர் எலான் மஸ்க் ஆதரவு தெரிவித்துள்ளார்.

சான் பிரான்ஸிஸ்கோவைச் சேர்ந்த இளம் ஓபன் ஏ.ஐ., இன்ஜினியர் சுஜிர் பாலாஜி. இந்திய வம்சாவ ளியை சேர்ந்த இவர், தனது அபார்ட்மென்டின் கழிவறையில் மர்மமான முறையில் இறந்து கிடந்தார். பொலிசார், மருத்துவ பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில், தற்கொலை என்று அறிவித்தனர்.



ஆனால், தனது மகனின் மரணத்தில் சந்தேகம் இருப்பதாகவும், தனியார் மருத்து வமனையின் பிரேத பரிசோதனை முடிவில் மரணத்திற்கான உண்மை தெரியப்படுத்தவில்லை என்று கூறிய அவரது தாயார் பூர்ணிமா ராமாராவ், எப்.பி.ஐ., விசாரணை நடத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தார். எக்ஸ் தளத்தில் அவர் விடுத்துள்ள பதிவில், 'கழிவறையில் இரத்த காயங்களுடன் மகன் உயிரிழந்து கிடந்துள்ளார். யாரோ அவரை தாக்கி கொலை செய்திருக்கலாம். ஆனால், தற்கொலை என்று கூறுகிறார்கள். எங்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். எப்.பி.ஐ., விசாரணை நடத்த வேண்டும்" எனக் குறிப்பிட்டிருந்தார்.

அவரது இந்தப் பதிவை டேக் செய்த எக்ஸ் தளத்தின் உரிமையாளரும், உலக பணக்காரர்களில் ஒருவருமான எலான் மஸ்க், 'இது தற்கொலை போல தெரியவில்லை" எனக் குறிப்பிட்டுள்ளார்.

# மலையாள நடிகர் திலீப் சங்கர் சடலமாக மீட்பு



'அம்மா இறைத்தே', 'பஞ்சாக்னி', 'சுந்தரி' போன்ற டிவி தொடர்களில் நடித்து புகழ்பெற்றவர் பிரபல மலையாள நடிகர் திலீப் சங்கர். கடந்த 19ஆம் திகதி திருவனந்தபுரத்தில் உள்ள தனியார் ஹோட்டலில் அறையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதுக்குறித்து பொலி ஸார் தெரிவிக்கையில், "அறை உள்ளிருந்து பூட்டப்பட்டிருந்தது. நாங்கள் கதவை உடைத்தபோது, அவர் அசைவற்று கிடந்தார்" என்றனர்.

இந்த மரணம் இரண்டு நாட் களுக்கு முன்பு நடந்ததாக நம்பப் படுகிறது. பிரேத பரிசோதனை அறிக்கையின்படி, மரணத் திற்கான காரணம் உள் இரத்தப் போக்கு, கீழே விழுந்த பின்னர் தலையில் ஏற்பட்ட காயத்தின் விளைவாக இருக்கலாம் என்று தெரிவித்துள்ளனர்.

# பெண்களின் பாதுகாப்பு குறித்து ஆளுநரிடம் விஜய் வலியுறுத்தல்



பெண்கள் பாதுகாப்பு, சட்டம் ஒழுங்கு பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் தொடர்பாக தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் ஆளுநரை சந்தித்து மனு கொடுத்தார்.

கடந்த சில தினங்களுக்கு முன்பு அண்ணா பல்கலை வளாகத்தில் மாணவி ஒருவரை பாலியல் வன்கொடுமை செய்த ஞானசேகரன் என்பவனை பொலிஸார் கைது செய்து சிறையில் அடைந்தனர்.

இந்த நபர் தி.மு.க.,வைச் சேர்ந்தவர் என்று சொல்லப்படுகிறது. அமைச்சர்களுடன் ஞானசேகரன் இருக்கும் போட்டோக்கள் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. ஆனால், தி.மு.க.,வினர் இதனை மறுத்து வருகின்றனர்.

இந்த பாலியல் வன்கொடுமை சம்பவத்திற்கு பல்வேறு கட்சிகளின் தலைவர் களும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர். அந்த வகையில், பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வலியுறுத்தி, த.வெ.க., தலைவர் விஜய் நேற்று கடிதம் ஒன்றை வெளியிட்டிருந்தார்.

இந்த நிலையில், த.வெ.க., தலைவர் விஜய் ஆளுநர் ரவியை ராஜ்பவனில் சந்தித்து பேசினார். இந்த சந்திப்பின் போது, பல்வேறு பிரச்சி னைகள் குறித்து பேசிய தாகக் கூறப்படுகிறது.

அந்த அறிக்கையில், "தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் தலைமையில் கவர்னர் ரவியை சந்தித்து மனு அளித்தோம். எங்கள் மனுவில் தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க வேண்டும் என்றும், அனைத்து இடங்களிலும் பெண்களுக்கான பாதுகாப்பை உறுதி செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத் தியுள்ளோம்.

மேலும், தமிழகம் முழுவதும் அண்மை யில் பெய்த பருவமழை மற்றும் பெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன்னும் உரிய நிவாரணம் கிடைக்கவில்லை. இந்த விவகாரத்தில் மாநில அரசு கேட்கும் நிவாரணத் தொகையை மத்திய அரசு முழுமையாக வழங்க வேண்டும் என மனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது. எங்கள் கோரிக்கைகளைக் கேட்ட கவர்னர், அவற்றைப் பரிசீலிப்பதாகக் கூறினார்" இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காஸாவில் 240 மருத்துவ ஊழியர்கள் சிறைபிடிப்பு





வடக்கு காஸாவின் பெய்ட் லாஹியா பகுதியில் செயல்பட்டு வந்த ஹமால் அத்வான் வைத்தியசாலையில் சனிக்கிழமை புகுந்த இஸ்ரேலிய படையினர் நோயாளிகளை வலுக்கட்டாயமாக வெளியேற்றி சுமார் 240 வைத்தியசாலை ஊழியர்களை சிறைபிடித்துள்ளதாக காஸா சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. வைத்தியசாலையின் அருகாமையில் விமானத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டதால் வைத்தியசாலை ஊழியர்கள் உட்பட 50 பேர் பலியாகினர். ஆபத்தான நிலையில் இருந்த 15 நோயாளிகள் வெளியேற்றப்பட்டனர் காஸா மீது இஸ்ரேல் கடந்த 14 மாதங்களாக நடத்தி வரும் தாக்குதலில் 46,000 இற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். இலட்சக்கணக்கில் மக்கள் படுகாயமடைந்துள்ள நிலையில் அவர்களும் போதுமான மருத்துவ உதவிகள் இல்லாமல் உயிரிழந்து வருகின்றனர். இந்நிலையில் வடக்கு காஸாவில் உள்ள கடைசி பெரிய வைத்தியசாலையை இஸ்ரேலிய படையினர் மூடியுள்ளனர்.

ஹமால் அத்வான் வைத்தியசாலையின் இயக்குனர் டாக்டர் ஹஸாம் அபு சஃபியாவை இஸ்ரேல் பாதுகாப்புப் படையினர் (IDF) சிறைபிடித்து அழைத்துச் சென்றுள்ளனர். அவர் ஒரு ஹமாஸ் பயங்கரவாதி என்று இஸ்ரேலிய படை குற்றம் சாட்டியுள்ளது. ஆனால் அதற்கான ஆதாரங்கள் எதனையும் வழங்கவில்லை. வெள்ளிக்கிழமை வைத்தியசாலையின் அருகாமையில் இஸ்ரேலிய விமானத் தாக்குதல் களில் மருத்துவ ஊழியர்கள் உட்பட 50 பேர் கொல்லப்பட்டதாக சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. வைத்தியசாலையை ஹமாஸ் பயங்கரவாதிகளின் கோட்டை எனத் தெரிவித்துள்ள இஸ்ரேலிய படை, வைத்தியர் அபு சஃபியாவும் ஒரு ஹமாஸ் பயங்கரவாத செயல்பாட்டாளராகவும், ஹமாஸ் பொறியியல் மற்றும் டேங்க் எதிர்ப்பு ஏவுகணை செயல்பாடுகளில் தொடர்புடையவர் என்று சந்தேகிக்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளது. ஆபத்தான நிலையில் இருந்த 15 நோயாளிகள், 50 பராமரிப்பாளர்கள் மற்றும் 20 சுகாதாரப் பணியாளர்கள் அருகிலுள்ள இந்தோனேசியன் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதாக உலக சுகாதார அமைப்பு (WHO) தெரிவித்துள்ளது. மேலும் அந்த பகுதியின் கடைசி பெரிய சுகாதார வசதி சேவையும் தற்போது இல்லை என்று கவலை தெரிவித்துள்ளது.

வைத்தியசாலை அமைந்துள்ள வடக்கு காஸாவின் பெய்ட் லாஹியா நகரம், அக்டோபர் மாதம் முதல் தொடர் தாக்குதலுக்கு உள்ளாகி வருகிறது. இஸ்ரேலிய படை வெளியிட்டுள்ள அறிக்கையில் பயங்கரவாதிகள் ஹமல் அத்வான் வைத்தியசாலையை ஜபாலியாவில் அதன் இராணுவ நடவடிக்கைகளுக்கான கட்டளை மையமாகப் பயன்படுத்துவதை உளவுத்துறை கண்டு பிடித்துள்ளதாகவும் சனிக்கிழமை 240 போராளிகளைக் கைது செய்ததாகவும் தெரிவித்துள்ளது.




# ஜனாதிபதி யூனை கைது செய்ய பிடியாணை கோரிக்கை

குறுகிய கால இராணுவ சட்டமூலம் தொடர்பான விடயத்தில் பதவி இடைநீக்கம் செய்யப்பட்ட ஜனாதிபதி யூன் சுக் யோலை தடுத்து வைத்து விசாரணை மேற்கொள்ள தென்கொரிய சட்ட அமுலாக்க அதிகாரிகள் நீதிமன்ற பிடியாணை உத்தரவு கோரியுள்ளனர்.

தென் கொரியாவின் கூட்டுப் புலனாய்வுத் தலைமையகம் திங்கட்கிழமையன்று (30) யூனைக் கிளர்ச்சி மற்றும் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டின் கீழ் கைது செய்ய பிடியாணை உத்தரவைக் கோரியது. விசாரணைக்கு ஆஜராகுமாறு இடைநீக்கம் செய்யப்பட்ட ஜனாதிபதிக்கு முன்னதாக அனுப்பப்பட்ட மூன்று அழைப்பாணைகள் நிராரிக்கப்பட்டதன் பின்னணியில் பிடியாணை உத்தரவினை நாடியதாக உயர் அதிகாரிகளுக்கான ஊழல் விசாரணை அலுவலகம் (CIO) காவல்துறை மற்றும் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள் அடங்கிய கூட்டு புலனாய்வுக் குழு தெரிவித்துள்ளது. எவ்வாறெனினும், தென் கொரிய வரலாற்றில் முதன் முறையாக ஜனாதிபதி ஒருவரை கைது செய்வதற்கான பிடியாணை கோரிக்கை தொடர்பில் நீதிமன்றம் முடிவினை மேற்கொள்ளும்.

கடந்த டிசம்பர் 3 ஆம் திகதி யூனின் குறுகிய கால இராணுவச் சட்டமானது தென் கொரியாவை திகைக்க வைத்தது டன், கிழக்கு ஆசிய தேசத்தை பல தசாப்தங்களில் அதன் மிகப்பெரிய அரசியல் நெருக்கடிக்குள் தள்ளியது. இதனால், யூன் டிசம்பர் 14 ஆம் திகதி அவரது பணிகளில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டார், தேசிய சட்டமன்றம் அவரை பதவி நீக்கம் செய்வதற்காக பெரும்பான்மையாக வாக்களித்தது. அரசியலில் நுழைவதற்கு முன்பு நாட்டின் உயர்மட்ட வழக்கறிஞராகப் பணியாற்றிய பழமைவாதத் தலைவரான



இவர் கிளர்ச்சி, ஆயுள் தண்டனை அல்லது மரண தண்டனை விதிக்கக்கூடிய குற்றத்தின் குற்றவியல் குற்றச்சாட்டுகளை எதிர்கொள்கிறார்.

# அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர் 100 ஆவது வயதில் காலமானார்



1977 முதல் 1981 ஆம் ஆண்டு வரை அமெரிக்காவின் 39 ஆவது ஜனாதிப தியாக பணியாற்றிய ஜிம்மி கார்ட்டர் (Jimmy Carter) தனது 100 ஆவது வயதில் ஜோர்ஜியாவில் உள்ள அவரது வீட்டில் காலமானார் என்று அமெரிக்க ஊடகத்தை மேற்கோள்காட்டி ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது. தனது மனிதாபிமானப் பணிக்காக அமைதிக்கான நோபல் பரிசை வென்ற கார்ட்டர், இஸ்ரேலுக்கும் எகிப்துக்கும் இடையே சமாதானத்தை ஏற்படுத்திய பெருமைக்குரியவர்.

கார்ட்டரின் மறைவு குறித்து அவரது மகன் புல்வர் சிப் கார்ட்டர் இட்டுள்ள பதிவொ ன்றில், "என் தந்தை எனக்கு மட்டுமல்ல, அமைதி, மனித உரிமைகள் மற்றும் தன்னலமற்ற அன்பில் நம்பிக்கை கொண்ட அனைவருக்கும் ஒரு ஹீரோ" என்று கூறியுள்ளார். கார்ட்டர், அண்மைய ஆண்டுகளில், கல்லீரல் மற்றும் மூளைக்கு பரவிய மெலனோமா உட்பட பல உடல்நலப் பிரச்சினைகளால் தொடர்ந்தும் போராடி வந்தார்.

அவர் 2023 ஆம் ஆண்டில் தீவிர நோய்வாய்ப்பட்டவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தும் ஒரு வகை சுகாதாரப் பராமரிப்பைப் பெற முடிவு செய்தார். மேலும் கூடுதல் மருத்துவ தலையீட்டிற்கு உட்படுத்த வேண்டாம் என்றும் அவர் தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஆப்கானிஸ்தானில் வீடுகளுக்கு ஜன்னல் வைக்கத் தடை: தலிபான் அரசு உத்தரவு



ஆப்கானிஸ்தானில் பெண்கள் வசிக்கும் பகுதிகளில் வீடுகளில் ஜன்னல் வைக்க வேண்டாம் என தலிபான் அரசு தடைவிதித்துள்ளது. ஆப்கானிஸ்தானில் 2021 ஆம் ஆண்டு தலிபான் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு பெண்களுக்கு கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. பெண்கள் ஆரம்ப கல்வி கற்கவும், பூங்கா உள்ளிட்ட பொது இடங்களுக்கு செல்லவும் தடை விதிக்கப்பட்டது. சமீபத்தில் பெண்கள் பொது இடங்களில் பாடுவதற்கும், கவிதைகள் வாசிப்பதற்கும் தடை விதிக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக தற்போது தலிபான் அரசு ஆப்கானிஸ்தானில் பெண்கள் வசிக்கும் பகுதிகளில் வீடுகளில் ஜன்னல் வைக்க தடை விதித்து உத்தரவிட்டுள்ளது. சமையல் அறைகளில் , முற்றங்களில் வேலை செய்யும் பெண்களை பார்ப்பது ஆபாசமான செயல்களுக்கு வழி வகுக்கும் என அந்நாட்டு அரசின் செய்தி தொடர்பாளர் ஜபி ஹில்சா முசாஹித் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே உள்ள வீடுகளில் ஜன்னல்கள் இருந்தால் அதனை மறைக்கும் விதத்தில் தடுப்புகள் அமைக்க வேண்டும் என்றும், புதிய கட்டிடங்களில் ஜன்னல்கள் இருக்க கூடாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. அண்டை வீட்டாரிடம் இருந்து தொல்லையை தவிர்க்க சுவர் கட்ட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் புதிதாக கட்டப்படும் கட்டுமான தளங்களை பார்வையிட வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

# ஜனவரி 1 முதல் புதிய தலைமுறை உருவாகிறது

நாளை 2025 புத்தாண்டு பிறக்க இருக்கும் நிலையில் அன்றைய தினம் முதல் பிறக்கும் குழந்தைகள் ஜென் பீட்டா (Gen Beta) என்னும் புதிய தலைமுறையாக இருப்பார்கள்



என்று கூறப்படுகிறது. 2025 ஆம் ஆண்டு முதல் 2039 ஆம் ஆண்டு வரை பிறப்பவர்கள் இவ்வாறு அழைக்கப்படுவார்கள். 1989 முதல் 1996 வரையிலான தலைமுறையை மில்லியனியல் என்றும், 1996 முதல் 2010 வரையிலான தலைமுறையை ஜெனரேசன் சட் (Gen Z) என்றும் 2010 - 2024 ஆம் ஆண்டு பிறந்தவர்களை ஜெனரேசன் அல்பா என்றும் தெரிவிக்கப்படுகிறது. ஜென் பீட்டா தலைமுறையினர் பெரும்பாலும் ஜென் அல்பா மற்றும் ஜென் சட்டுகளின் வாரிசுகளாக இருப்பார்கள் என்று கூறப்படுகிறது. AI தொழில்நுட்பம் மற்றும் ஓட்டோமேசன் ஆகியவை, பீட்டா வினரின் அன்றாட வாழ்க்கை, கல்வி மற்றும் பணியிடங்களில் சுகாதாரம் மற்றும் பொழுதுபோக்கு ஆகியவற்றில் முழுமையான ஆதிக்கம் செலுத்தும். தொழில்நுட்பம் அவர்களின் விரல் நுனியில் இருக்கும். அதே வேளையில், காலநிலை மாற்றம், நகரமயமாக்கல் மற்றும் உலகளாவிய மக்கள் தொகை மாற்றங்கள் போன்ற பல குறிப்பிடத்தக்க சவால்களைக் கொண்ட ஒரு சமூக வாழ்க்கையை பீட்டா தலைமுறையினர் எதிர்கொள்வார்கள்.

# பீஸ்ட் கேம்ஸ்' தொடர் நிகழ்ச்சியில் வெற்றி பெறுபவருக்கு பரிசாக 'தீவு'

உலகிலேயே மிக அதிகமாக 100 மில்லியன் அமெரிக்க டொலர் பட்ஜெட்டில் நடத்தப்படும் 'பீஸ்ட் கேம்ஸ்' ரியாலிட்டி நிகழ்ச்சியில் வெற்றி பெறும் நபருக்கு 5 மில்லியன் டொலர் மெகா பரிசுடன் தனியார் தீவு ஒன்றும் பரிசளிக்கப்படுகிறது.

நெட்பிளிக்ஸில் கடந்த 2021 ஆம் ஆண்டு வெளியான 'ஸ்விட் கேம் தொலைக்காட்சி தொடர் 22 மில்லியன் டொலர் செலவில் நடத்தப்பட்டது. இதேபோல் "கேம் ஆப் த்ரோன்ஸ்" தொலைக்காட்சி நிகழ்ச்சிக்கு 50 மில்லியன் டொலர் செலவானது. 'தி லாஸ்ட் ஆஃப் அஸ்' என்ற நிகழ்ச்சிக்கு 90 மில்லியன் டொலர் செலவானது. தற்போது அதைவிட அதிகமாக 100 மில்லியன் டொலர் பட்ஜெட்டில் 'பீஸ்ட் கேம்ஸ்' என்ற ரியாலிட்டி நிகழ்ச்சி வெளிவந்துள்ளது.

அமேசன் பிரைம் வீடியோவில் கடந்த 19 ஆம் திகதி முதல் ஒளிபரப்பப்படும் தொலைக்காட்சி தொடரை மிஸ்டர் பீஸ்ட் என அழைக்கப்படும் ஜிம்மி டொனால்ட்சன் உருவாக்கியுள்ளார். அமெரிக்கா மற்றும் கனடாவில் தயாரிக்கப்பட்ட




இந்நிகழ்ச்சியில் 1,000 பேர் பங்கேற்று 5 மில்லியன் டொலர் பணத்துக்காக பல சவால்களை சந்தித்து போட்டியிடுகின்றனர். இத்தொடரின் முதல் சீசனில் 10 பாகங்கள் வாரந்தோறும் வெளிவருகிறது. ஒவ்வொரு பாகத்திலும் ஒருவர் ரூ.80,000 டொலர் பணத்துடன் வெளியேற்றப்படுகிறார். இந்நிகழ்ச்சியில் இறுதியில் வெற்றி பெறும் நபருக்கு 5 மில்லியன் டொலர் மெகா பரிசுடன் ஒரு தனியார் தீவும் பரிசளிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க அவசர உதவி எண்ணிற்கு 17 முறை அழைத்த நபர் கைது




அமெரிக்காவின் அவசர உதவி எண்ணான 911 இற்கு தொடர்ந்து 17 முறை அழைத்து பொலிஸாரை தொந்தரவு செய்த 24 வயதான நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஆடம் வான் என்ற நபர் அவசர உதவி எண்ணான 911 இற்கு தொடர்பு கொண்டு பேசியுள்ளார். அப்போது அருகில் இருக்கும் பலசரக்கு கடைக்குச் செல்வதற்கு பொது போக்குவரத்தை பயன்படுத்தாமல், பொலிஸாரின் வாகனத்தில் வந்து தன்னை இறக்கி விடுமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார். இதனை கேட்டு கோபமடைந்த பொலிஸார் ஆடம் வான் இருப்பிடத்திற்கே சென்று அவரை எச்சரித்துள்ளனர். அவசர உதவிக்கு மட்டும் தான் 911 எண்ணை தொடர்பு கொள்ளவேண்டும் என அவரிடம் தெரிவித்துள்ளனர். ஆனாலும் 911 எண்ணுக்கு ஆடம் வான் 17 ஆவது முறையாக மீண்டும் அழைத்துள்ளார். இதனால் அவசர உதவி எண்ணை தவறாக பயன்படுத்திய குற்றத்தின் அடிப்படையில் ஆடம் வானை பொலிஸார் கைது செய்தனர்.

# இந்திய – அவுஸ்திரேலிய 4 ஆவது டெஸ்ட் போட்டி

## அவுஸ்திரேலியா 184 ஓட்டங்களால் வெற்றி



இந்திய – அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான போர்டர் – கவாஸ்கர் டெஸ்ட் தொடரின் நான்காவது போட்டியில் அவுஸ்திரேலியா அணி 184 ஓட்டங்களால் வெற்றிபெற்று தொடரில் 2–1 என்றடிப்படையில் அவுஸ்திரேலியா முன்னிலைப் பெற்றுள்ளது.

மெல்பேர்னில் நடைபெற்ற நான்காவது போட்டியின் 340 என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய இந்திய 79.1 ஓவர்களில் 155 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்து தோல்வியைத் தழுவியது.

இந்திய அணி சார்பில் யஷஸ்வி ஜெய்ஸ்வால் அதிகபட்சமாக 84 ஓட்டங்களை பெற்றுக் கொண்டதுடன், ரிசப் பந்த் 30 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

ஏனைய அனைத்து வீரர்களும் ஒன்றை இலக்கத்துடன் ஆட்டமிழந்தனர். அவுஸ்திரேலியா சார்பில் பட் கம்மின்ஸ் மற்றும் ஸ்கொட் போலன்ட் தலா மூன்று விக்கெட்டுகளையும், நேதன் லயன் இரண்டு விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலியா அணி முதல் இன்னிங்சில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 474 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

ஸ்டீவ் ஸ்மித் 140 ஓட்டங்களை பெற்றுக் கொண்டதுடன், இந்திய அணி சார்பில் பும்ரா நான்கு விக்கெட்டுகளை கைப்பற்றியிருந்தார்.

தொடர்ந்து தனது முதல் இன்னிங்சில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி முதல் இன்னிங்சில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 369 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

நிதிஷ் குமார் ரெட்டி 114 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். பட் கம்மின்ஸ், நேதன் லயன் மற்றும் ஸ்கொட் போலன்ட் தலா மூன்று விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

105 ஓட்டங்களை முன்னிலைப் பெற்றிருந்த அவுஸ்திரேலியா அணி தனது இரண்டாவது இன்னிங்சில் 234 ஓட்டங்களை பெற்றிருந்த போது ஆட்டமிழந்தது. இதன்மூலம் இந்திய அணிக்கு 340 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

போட்டியின் இறுதி நாளான நேற்று இந்திய அணி ஆரம்பம் முதலே தடுமாறியதுடன், முன்னணி வீரர்கள் அனைவரும் சொற்ப ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தனர்.

யஷஸ்வி ஜெய்ஸ்வால் மட்டும் நிதானமாக துடுப்பெடுத்தாடி ஆறுதல் அளித்த போதிலும், அவுஸ்திரேலியா அணியின் அபார பந்து வீச்சில் ஏனைய வீரர்கள் தடுமாறினர்.

இறுதியில் 79.1 ஓவரில் இந்திய அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 155 ஓட்டங்களை மட்டுமே பெற்றுத் தோல்வியடைந்தது.

இதன் மூலம் ஐந்து போட்டிகள் கொண்ட தொடரில் 2–1 என்ற கணக்கில் அவுஸ்திரேலியா முன்னிலைப் பெற்றுள்ளது. மேலும், உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கான வாய்ப்பையும் அவுஸ்திரேலியா உறுதிப்படுத்தியுள்ளது.

ஏற்கனவே, தென்னாப்பிரிக்கா அணி உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கான வாய்ப்பை உறுதிப்படுத்தியுள்ளதையும் குறிப்பிடத்தக்கது.



## வர்ணனையாளர் டோனி கிரேக்கின் 12 ஆவது நினைவுதினம்

இலங்கையை எப்போதும் நேசித்த "கிரிக்கெட் மைதானத்தின் கம்பீர குரலோன்" என்று அழைக்கப்பட்ட மறைந்த கிரிக்கெட் வர்ணனையாளர் டோனி கிரேக்கின் 12 வருட நினைவு தினம் நேற்று முன்தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

டோனி இல்லாத ஒர் அறிவிப்பாளர் அறையை ரசிகர்கள் இல்லாத திரையரங்கைப் போன்றது.

கம்பீரமான ஆளுமை மற்றும் நட்புக் குரலுடன் விளங்கிய உலகின் தலைசிறந்த புலனாய்வு கிரிக்கெட் வர்ணனையாளரின் மரணச் செய்தி உலகம் முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியதுடன் பலருக்கும் கனவாக இருந்தது. அவுஸ்திரேலியாவின் சிட்னியில் டோனி காலமானார் என்ற செய்தி உலக கிரிக்கெட் ரசிகர்களை உலுக்கியது. இன்றும் டோனி கிரெக் இலங்கை கிரிக்கெட் ரசிகர்கள் மத்தியில் பிரபலமான பெயர்.

இலங்கை கிரிக்கெட் வீரர்களுக்குப் பிரியமான பெயர்களைச் சூட்டி விசித்திரத்தையும் புத்துணர்ச்சியையும் ஏற்படுத்திய டோனி கிரேக் 2012 டிசம்பரில் நோய்வாய்ப்பட்டிருந்த போது, அவர் குணமடைய வேண்டி இந்நாட்டு விளையாட்டு ரசிகர்கள் பல்வேறு சமய நிகழ்வுகளை ஏற்பாடு செய்தனர். அதை உணர்ந்து தான் நோய்வாய்ப்பட்டிருந்த போதும் இலங்கை மக்களுக்குத் தனது நன்றியைத் தெரிவிக்க மறக்கவில்லை.

அவுஸ்திரேலியாவில் உள்ள செயின்ட் வின்செென்ட் வைத்தியசாலையில் அவரின் இறுதி மூச்சு நின்று போனது.

இருப்பினும் அவர் இறப்பதற்கு சில மாதங்களுக்கு முன்பு அவர் தனது மனைவியுடன் புற்றுநோயுடன் போராடுவதாகக் கூறப்பட்டது. ஆனால் டோனி கிரெக்கின் மரணச் சான்றிதழில் மரணத்திற்கான காரணம் மாரடைப்பு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தனது 66 வருட வாழ்க்கையின் பெரும்பகுதியை கிரிக்கெட் மைதானத்திலும், வர்ணனையாளர் அறையிலும் கழித்த பின்னர், அவரது கடைசி வர்ணனை 2012 இலங்கையில் நடைபெற்ற இருபதுக்கு 20 கிரிக்கெட் போட்டியாகும்.

டோனி கிரேக் இலங்கை மற்றும் இலங்கை கிரிக்கெட்டை மிகவும் நேசித்தவர். 1996 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை இலங்கை வெல்லும் என்று கணிக்கும் அளவிற்கு டோனி கிரேக்கின் கவனம் இலங்கை மீது குவிந்திருந்தது.

## இலங்கை –நியூசிலாந்து 2வது ரி20 நியூசிலாந்து அபார வெற்றி



இலங்கை –நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான, 2வது ரி20 போட்டியில் நியூசிலாந்து அணி 45 ஓட்டங்களில் வெற்றி பெற்றுள்ளது. இலங்கைக்கு எதிரான மூன்று போட்டிகள் கொண்ட ரி20 தொடரில் நியூசிலாந்து 2–0 என்ற விதத்தில் முன்னிலை பெற்றுள்ளது. மார்க் சாப்மேன், மைக்கேல் ஹே மற்றும் டிம் ராபின்சன் ஆகியோரின் அபார துடுப்பாட்டத்தில் நியூசிலாந்து அணி 20 ஓவர்கள் முடிவில் ஐந்து விக்கெட்டுகளுக்கு 186 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

நியூசிலாந்தின் 186 ஓட்ட இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 19.1 ஓவர்களில் 141 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுகளையும் இழந்து தோல்வியடைந்தது.

நியூசிலாந்து 5 விக்கெட்டுக்கு 186 (சாப்மேன் 42, ஹே 41, ராபின்சன் 41) இலங்கை 141 (பத்தும் நிஸ்ஸ ங்க (37), குசல் பெரேரா (48) மற்றும் சரித் அசலங்க (20) ஆகியோரே அதிகப்படியான ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர். நியூசிலாந்து டஃபி 15 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

ஹே 19 பந்துகளில் 41 ஓட்டங்களை எடுத்து ஆட்ட நாயகனாக தெரிவு செய்யப்பட்டார்.

## வடக்கு மாகாண உடற்கட்டமைப்பு ஆணழகன் போட்டி





**புு.கஜிந்தன்**

யாழ்.மாவட்ட உடற்கட்டமைப்பு மற்றும் விருத்தி சங்கம் நடாத்திய 6 ஆவது வடக்கு மாகாண உடற்கட்டமைப்பு ஆணழகன் (Body building) மற்றும் பெண் உடலமைப்பு அழகி ( Women physique) ஆகிய போட்டிகள் யாழ்ப்பாணத்தில் சனிக்கிழமை (28) நடைபெற்றன.

வட மாகாண உடற்கட்டமைப்பு ஆணழகன் போட்டியில், வவுனியா DFC உடற்கட்டமைப்பு நிலையம் சார்பாகப் போட்டியிட்ட சத்தியசீலன் பிரதீப், முதலாம் இடத்தைப் பெற்று வட மாகாண உடற்கட்டமைப்பு ஆணழகனாக தெரிவு செய்யப்பட்டார்.

இந்தப் போட்டியில், இரண்டாம் இடத்தை மன்னார் TSP உடற்கட்டமைப்பு நிலையம் சார்பாகப் போட்டியிட்ட லியோன் ஜோயல் பெற்றுக் கொண்டார்.

மூன்றாம் இடத்தை வவுனியா JRP உடற்கட்டமைப்பு நிலையம் சார்பாக போட்டியிட்ட சுகுமார் ரன்சித்குமார் பெற்றுக் கொண்டார்.

இதேவேளை, பெண்கள் உடலமைப்பு அழகிகளுக்காக நடத்தப்பட்ட போட்டியில், வவுனியா DFC உடற்கட்டமைப்பு நிலையம் சார்பாகப் போட்டியிட்ட ஜோசப் ஜோன்சன் தவச்செல்வி வட மாகாண பெண் உடலமைப்பு அழகியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

## ICC Awards 2024; ஒரு நாள் - ரி20 போட்டிகளில் ஆண்டுக்கான சிறந்த வீரர்-வீராங்கனை





ஐசிசி விருதுகள் 2024க்கான இரண்டாவது பட்டியல் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டுக்கான சிறந்த ஒரு நாள் கிரிக்கெட் வீரர் ODI மற்றும் சிறந்த ரி20 கிரிக்கெட் வீரர்கள் பிரிவிற்கான தேர்வு போட்டியில் முன்னணி சர்வதேச கிரிக்கெட் வீரர்களின் பெயர்களை சர்வதேச கிரிக்கெட் சபை (ICC) வெளியிட்டுள்ளது.

வளர்ந்து வரும் ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவுகளில் பட்டியலிடப்பட்ட வேட்பாளர்களின் பெயர்கள் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டில் ஒரு நாள் போட்டிகளில் அதிக விக்கெட்டுகள் (26) மற்றும் அதிக ஓட்டங்களை (742) வீழ்த்திய பெருமைக்குரிய இலங்கை ஜோடியான வனிந்து ஹசரங்க மற்றும் குசல் மெண்டிஸ் ஆகியோர் ஐசிசியின் ஆண்டின் சிறந்த ஒருநாள் கிரிக்கெட் வீரருக்கான பெயர் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளதோடு. ஆப்கானிஸ்தானின் அஸ்மத்துல்லா ஓமர்சாய், 2024 ஆம் ஆண்டில் 417 ஓட்டங்கள் மற்றும் 17 விக்கெட்டுகளை வீழ்த்தி, துடுப்பாட்டம் மற்றும் பந்து வீச்சு இரண்டிலும் பிரகாசித்தவர்.அதே வரிசையில் மேற்கிந்தியத் தீவுகளின் ஷெர்பேன் ஷூதர்போர்ட், 2024 இல் 425 ஓட்டங்களை எடுத்து 106.25 சராசரியைப் பெற்றுள்ளார் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளார்.

### ICC மகளிர் ஒரு நாள் சிறந்த வீராங்கனைகள்

ICC மகளிர் ஒரு நாள் சிறந்த வீராங்கனைகளின் பட்டியலில் இலங்கையின் சமரி அத்தபத்து, இந்தியாவின் ஸ்மிருதி மந்தனா, அவுஸ்தி ரேலியாவின் சிறந்த சகல வீராங்கனை அனாபெல் சதர்லேண்ட் மற்றும் தென்னாப்பிரிக்க கெப்டன் லாரா வோல்வார்ட் 697 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

ICC ஆண்கள் டி20 கிரிக்கெட் வீரர் ரி20 தேர்வாளர்களில், அமெரிக்கா மற்றும் மேற்கிந்தியத் தீவுகளில் நடந்த ICC ரி20 உலகக் கிண்ணத்தில், இந்திய வீரர் அர்ஷ்தீப் சிங், 36 விக்கெட்டுகளை வீழ்த்திய பட்டியலில் முதலிடத்தில் உள்ளார். மேலும், 738 ஓட்டங்களுடன் இந்த ஆண்டுக்கான ஓட்டங்கள் குவிப்பு பட்டியலில் முதலிடத்தில் இருக்கும் பாகிஸ்தானின் பாபர் அஸாம், 15 போட்டிகளில் 539 ஓட்டங்கள். அவுஸ்திரேலியாவின் டிராவிஸ் ஹெட் ஜிம்பாப்வேயின் சிக்கந்தர் ராசா ஆகியோரும் விருதுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

### ICC மகளிர் சிறந்த ரி20 கிரிக்கெட் வீராங்கனை

இந்த பட்டியல் சமரி அத்தபத்து மற்றும் லாரா வோல்வார்ட் மீண்டும் பரிந்துரைக்கப்பட்டனர். இலங்கையின் ஆசியக் கிண்ண வெற்றியில் 720 ஓட்டங்கள் மற்றும் 21 விக்கெட்டுகளுடன் அதபத்து தனது திறமைகளை வெளிப்படுத்தியுள்ளார்.

வோல்வார்ட் அக்டோபரில் நடந்த ஐசிசி மகளிர் ரி 20 உலகக் கிண்ணத்தில் மற்றவர்களை விட அதிக ஓட்டங்களை எடுத்தார். அவரது தலைமையில் தென்னாப்பிரிக்கா இறுதிப் போட்டி வரை சென்றது.

நியூசிலாந்தின் அமெலியா கெர் ரி 20 உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் 29 விக்கெட்டுகள் மற்றும் 387 ஓட்டங்களுடன் பட்டியலில் இடம்பெற்றுள்ளார்.

அயர்லாந்து சகலதுறை ஆர்லா ப்ரெண்டர்காஸ்ட், 2024 இல் 21 விக்கெட்டுகளை வீழ்த்தி 539 ஓட்டங்களை எடுத்து பட்டியலில் நான்காவது இடத்தில் உள்ளார்.

இரசிகர்கள் www.icc-cricket.com இல் தங்களுக்குப் பிடித்த கிரிக்கெட் வீரர்களுக்கு வாக்களிக்க முடியும்.

CC Men's ODI Cricketer of the Year; வனிந்து ஹசரங்க (SL), குசல் மெண்டிஸ் (SL), அஸ்மத்துல்லா ஓமர்சாய் (AFG), ஷெர்பேன் ரூதர்போர்ட் (WI) CC Women's ODI Cricketer of the Year சமரி அதபத்து (SL), ஸ்மிருதி மந்தனா (IND), அனாபெல் சதர்லேண்ட் (AUS), லாரா வோல்வார்ட;(SA)

ICC Men's T20I Cricketer of the Year; ghgu; mrhk; (PAK), டிராவிஸ் ஹெட் (AUS), சிக்கந்தர் ராசா (ZIM), அர்ஷ்தீப் சிங் (IN). ICC Women's T20I Cricketer of the Year; சமரி அத்தபத்து (SL), அமெலியா கெர் (NZ), ஆர்லா ப்ரெண்டர்காஸ்ட் (IRE), லாரா வோல்வார்ட் (SA)

இந்தப் பத்திரிகை கொழும்பு – 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள "அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்" நிறுவனத்தினரால் 2024 டிசம்பர் 31ம் திகதி செவ்வாய்க்கிழமை தயார் செய்யப்பட்டு, எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.